விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 22 வெள்ளிக்கிழமை (06.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 077

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# இலங்கை அரசு மீண்டும் தவறு இழைக்கக் கூடாது

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் ஜெனிவாவில் உரை




(ஜெனிவா)

கடந்த காலங்களில் விட்ட தவறுகளை மீண்டும் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளக் கூடாது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் செயிட் ராட் மல் ஹுசைன் கோரியுள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற தேர்தல் வரும்போது பொறாமையின்றி போட்டி போடுங்கள்

### ஒருங்கிணைந்த சேவை தேவை – விக்னேஸ்வரன்



(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தல்கள் வரும்போது பொறாமை இல்லாமல் போட்டிகளில் பங்குபற்ற நாங்கள் திடசங்கற்பம் பூணவேண்டும். மக்கள் சேவையை முன்வைத்து முன்னேறவேண்டும்.

எங்கள் ஒற்றுமையும் ஒருங்கிணைந்த சேவையும் இங்கிருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்லதொரு வாழ்க்கையை ஏற்படுத்தும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று, குழந்தைகள் விடுதி மறறும் பழைய

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலிலிருந்து பசில் ஒதுக்கம்



(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## கண்டி அரசியல் கூட்டத்திற்கு இன்று வருவார் மகிந்த !

### தேசிய சுதந்திர முன்னணி நம்பிக்கை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்டவர்கள் இணைந்து இன்று கண்டியில் நடத்த திட்டமிட்டுள்ள அரசியல் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிச்சயமாக கலந்து கொள்வார் என தேசிய சுதநதர முன்னணியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நுகேகொடை கூட்டத்தில் 5 இலட்சத்

23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் திருத்தத்தின் பின்னரே பொதுத்தேர்தல் நடத்தப்படும்

### அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தேர்தல் முறையில் திருத்தம் கொண்டுவந்ததன் பின்னரே புதிய பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் புதனகிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த முடிவை அறிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைசசரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும் தேர்தல்கள் ஆணையாளரும் சட்டமா அதிபரும் தலைமை நில அளவையாளரும் புதிய தேர்தல் முறை பற்றி பேச்சு வார்த்தை

23ஆம் பக்கம் பார்க்க....

## ரணிலின் பிரதமர் பதவி 100 நாட்கள் மட்டுமே !

### ஐ.தே.கவை மக்கள் ஆதரிக்கவில்லை – ஜே.வி.பி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 100 நாட்கள் மாத்திரமே பிரதமராக இருக்க முடியும் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மகரகம நகரில் நேற்றுமுன்தினம நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் உரை யாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ரணில் அரசாங்கத்தை அமைக்க மக்கள் வாக்களிக்கவில்லை. ஐக்கியக் தேசியக்

24ஆம் பக்கம் பார்க்க....

## மின் கம்பத்துடன் மோதி மோ.சைக்கிள் விபத்து

### இளம் குடும்பஸ்தர் பலி; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதியதில் அதில் பயணம் செய்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற றப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை

23ஆம் பக்கம் பார்க்க....

## மாலதி கலையரங்கில் விசமிகள் தீவைப்பு

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் அமைந்துள்ள மாலதி கலையரங்கம் நேற்று வியாழக்கிழமை நணபகல் விஷமிகளால் தீயிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கலையரங்கக் கட்டடத்தின் உட்புறத்தில் விளையாட்டு உபகரணங்கள் வைக்கப்பட்டு பூடடப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் தீவைக்கப்பட்டமையால் அது உபகரணங்கள்மீது விரைவாக பரவியதுடன் கொழுந்து விட்டு

23ஆம் பக்கம் பார்க்க....

**நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி

**விற்பனைக்குண்டு**

முல்லைத்தீவு நீராவிப்பிட்டி
மாஞ்சோலை வைத்தியசாலைக்கு
முன்பாக 1/2 ஏக்கர் அறுதிஉறுதிக்
காணி விற்பனைக்கு உண்டு (C-295)

தொடர்பு:

**0770579506**


# குடும்பத் தகராறு; ஒருவர் கொலை

குடும்பத் தகராறில் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் கிண்ணையடி கிராமத்தில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பெருங்குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எல். அமரசிங்க தெரிவித்தார்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இரண்டு பெண்களும், ஒரு ஆணுமாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுப்பிரமணியம் அருண உதயம் (வயது 34) என்பவரே இச்சம் பவத்தில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சுப்பிரமணியம் அருண உதயம், அவரது தாய், தாயின் இரண்டாவது கணவர் மற்றும் சகோ தரர்கள் எல்லோரும் ஒன்றாக வசித்து வந்து ள்ளனர்.

இவர்கள் தமக்கிடையே அடிக்கடி சண்டை பிடிப்பதாகவும், இவ்வாறே நேற்றுமுன்தினம் இரவும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், சண்டையாக மாறியுள்ளது.

இதனையடுத்து, குறித்த நபர் மார்பில் குத்தப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச் சேனை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (செ-11)


# யாழ். மாவட்ட உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

எதிர்வரும் 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் உழவு இயந்திர உரிமையாளர் ஆகிய நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒரு சங்கம் அமைப்பது தொடர்பாக ஒன்றுகூடல் ஒன்று நடத்த உள்ளோம். இதில் பங்குபற்றி தங்களுடைய கருத்துக்களைக் கூறி இச்சங்கம் அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இடம்:-பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு. (டிப்போ அருகாமை)**
**நேரம்:-மு.ப 10.00 மணி**

(9683) இங்ஙனம்: செயற்குழு.



# சேவைநலம் பாராட்டு வாழ்த்தும் மடல்



குருநகர் சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய உப அதிபராக

**திருமதி யூஜின் குளோட்டில்லா யூலியஸ்**

B.A (டிப்ளோமா)

**வாழி நாமம் நீடே!**

கல்வியாம் பாரம் பரியத்தை கலங்கரை விளக்காய்ப் பதித்துள்ளீர்!
சொல்லரிய இன்னல் வாழ்வினிலே சூழ்ந்து நின்று தடுத்தபோதும்!
கல்வித் துணையால் விரட்டினீரே கரம் சேர் தொழுதனனை இழந்தாலும்!
செல்வங்கள் என்னும் பிள்ளைகளால் செகமதில் துல்லிய வாழ்ந்தீர்!

அரசால் ஓய்வதை வழங்கின்றார் ஆனாலும் நும்பணி நிலைத்திடுமே!
சிரமேற் தாங்கிய கற்பித்தலால் சிறக்க எம் மண் குருநகராம்!
தரமதில் மேலோங்கச் செய்துவந்த தமிழ் பணியோடு மறை பணிதானும்!
உரமதை நாட்டில் தோற்றுவிக்கும் உயரநும் நாமமென நீடு வாழ்த்துவோமே!

49/1, மவுன்கார் மேல்வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
06.03.2015 (9685)

வாழ்த்துவோர்:- யாழ்.ரெத்தினா, கலா பூஷணம்
அன்ரனி யேசுராசா பாரியாரும்
குடும்பத்தினர்கள்.


# வாகன விபத்து; இருவர் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் வடமராட்சி மாலுசந்தி தெருமுடிச் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தொண்டைமானாறு அரசடியை சேர்ந்த சிவதாஸ் வசந்தகுமார் (வயது 32) மற்றும் துவிச் சக்கர வண்டியில் பயணித்த புலோலி வடக்கினை சேர்ந்த சதாசிவம் மதூசுவின் (வயது 16) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.(செ-60)


# மணிவிழா மகுடம் காணும் அன்னையே!

குருநகர் சென்ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய உப அதிபராக

**திருமதி யூஜின் குளோட்டில்லா யூலியஸ்**

B.A (டிப்ளோமா)



தாயிற் சிறந்ததோர் கோவிலில்லை தாயாக எமக்கமைந்த அன்னையே!
போயிற்று வாழ்வெனத் துயிலாமல் பொல்லார் செயலால் துணை நீங்கிதும்!
நோயிற்றுடலாம் சோர்ந்து போனாலும் நோகாமல் ஆண் பெண் இருபாலார்!
கோயிற்குன்றான நான்கு பிள்ளைகள் குவலயத்து சீர்கென வாழவைத்தீர்!

எங்களை தனங்கல்வி யொடுவுலகே எந்நாளும் திகழ்ந்திடப் பாடுபட்டீர்!
மங்கல மிழந்து நின்ற போதுன்னை மண்ணிதிலே மதிப்பார்ந்த கற்பித்தலாலே!
மங்காத சென்ஜேம்ஸ் கூடந்தன்னே மகளிர்க்கு புகட்டல் உப அதிபராக!
தங்கு புகழ் சூட்டி ஓய்வு பெறுமம்மா தம் பாதம் பணிந்தே வாழ்த்துவோமே!

(9685)
25 சென் ஜேம்ஸ் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
06.03.2015

வாழ்த்துவோர்,
மகள்-எம்.றேணுகா
மருமகன்-யே.பிரசன்னா
பேரன்-எம்.பிரவின்


# சாராயப் போத்தல்களுடன் ஆட்டோ நபர் கைது

(கரணவாய்)

சட்ட விரோதமான முறையில் ஆட்டோவில சாராயம் போத்தல்கள் மற்றும் பியர்ரின்கள் ஆகியவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் வல்வெட்டித்துறை இளைஞர் ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் வதிரி சந்தியில் இடம் பெற்றுள்ளது.

ஆட்டோவில் இருந்து 30 கால் சாராயப் போத்தல்களையும் 5 பியர்களையும் பருத்தித்துறை பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

குறித்த சந்தேக நபரை நேற்றைய தினம் பருத்தித் துறை நீதவான் உ.விஜயராணி முன்னிலையில் பருத்தித்துறை பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

சந்தேக நபருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த நீதவான் எதிர்வரும் 13-ம் திகதி சாராய போத்தல்களையும் ஆட்டோவையும் நீதி மன்றில் ஒப்படைக்குமாறும் பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (செ-60)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**




கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS ஐ வழங்குகிறோம். மொழி பெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ்சு ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

DELF A1 International Diploma:வகுப்பு ஆரம்பமாகியுள்ளது.
பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 3850 ஏனையோருக்கு 9900

ஆரம்பம் 8.3.2015 உடன் அழைத்து பதிவுசெய்யுங்கள்...

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → றக்கா றோட் → AF



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.வைரமுத்து இராமச்சந்திரன்**

கற்கோவளம் பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வைரமுத்து இராமச்சந்திரன் அவர்கள் 04.03.2015 (புதன்கிழமை) அன்று அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ்.நீதிமன்றத்தில் பதவியேற்றுள்ளார். இவர் யாழ்.ஸ்ரீலங்கா தொலைத் தொடர்பு நிலையத்தில் தொழில்நுட்பவியலாளரும் ஸ்ரீ புலோலி கிழக்கு அதிவீரபத்திரர் தேவஸ்தான தர்மகர்த்தாவாகவும் புற்றளை ஸ்ரீ சித்திவிநாயகர் திருக்குறிப்பு தொண்டர் திருச்சபையின் தலைவராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

- வாழ்த்துவோர் -

அப்பா, அம்மா, மாமா, மாமி,
(9684) மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.



# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

**கிட்டினன் சிவநேசன்**

(முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் யாழ்.மாவட்டம்)



சீர் வளர் மிக்க வந்த சிந்தனை நாயகனே
பார் அது சென்று தமிழ் நலம் காத்த
பற்றுயிர் நாயகனே
ஊர் வளம் சிறக்க வந்த உத்தம நாயகனே
யார் அறிந்தார் எமை நீங்கிச் செல்வீர்
என-எம்மில்
ஓர் உயிர் போயிற்று சிவனின் திருவடிக்கென்று
ஊர் அது அடங்கியது வேதனையில்-எம்
உயிர் கலங்கியது உம்பிரிவில்-வளி
முகத்தின் விளக்கில் அகப்பட்டோம் இன்று
ஏழாண்டு சென்றும் உம்-நினைவலைகள்
எம் நெஞ்சங்களில் இன்றும் தூறலாய்...

வார்க்கது
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (சி-291)

தகவல்:-குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மாதம் 2 ஆயிரம் வழங்கப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**வரவு செலவுத் திட்டத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா மாதம் 2 ஆயிரம் என்ற கணக்கில் 10 மாதங்களுக்கு வழங்கப்படும் என அமைச்சரவையின் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன நேற்று தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

தேர்தல் முறை திருத்தத்தின் பின்னர், புதிய தேர்தல் நடத்தப்படும். தொகுதிவாரி மற்றும் விகிதாசார அடிப்படையிலான கலப்பு தேர்தல் முறையாக அது இருக்கும்.

கடந்த அரசாங்கத்தில் தினேஷ் குணவர்தன குழு பரிந்துரை தேர்தல் முறைக்கும் அப்பால் சென்ற தேர்தல் முறையாக புதிய தேர்தல் முறை அமையும்.

அரசியலமைப்புத் திருத்தத்திற்கு பிறகோ அல்லது சர்வஜன வாக்கெடுப்பிற்கு பின்னரோ பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையாளரின் அறிக்கை அடுத்த சில தினங்களில் கிடைக்கும் எனவும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (இ-5)


## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக்கிளையின் ஆதரவுடன் கொழும்புக்கிளையினால் வடமாகாணத்தில் நடத்தப்படும் கணிதப்புதிர்ப்போட்டி- 2015

தரம்-08 ஐச் சேர்ந்த மாணவர்களுக்கு வருடா வருடம் நடத்தப்படும் மேற்படி கணிதப் புதிர்ப்போட்டி இவ்வருடமும் எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஐந்து மாவட்டங்களிலும் நடைபெற இருக்கின்றது. இப்போட்டியில் தமது மாணவர்களும் பங்குபற்ற வேண்டும் என விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக, மாணவர் முழுப்பெயர், பிறந்த திகதி, சேர்விலக்கம் மற்றும் பாடசாலையின் தொலைபேசி இலக்கம் அடங்கிய பட்டியலைப் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 'அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் தலைவர், சட்டத்தரணி திரு.இ.செல்வஸ்கந்தன் அவர்களினால் வழங்கப்படவுள்ள பரிசு விபரம் வருமாறு,

1 ஆம் இடம்: ரூபா. 25,000.00
2 ஆம் இடம்: ரூபா. 20, 000.00
3 ஆம் இடம்: ரூபா.15,000.00
4 ஆம் இடம்: ரூபா. 10,000.00
அடுத்து 06 இடங்களுக்கும் ரூபா. 7,500.00

அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(சி-279)



## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

மேற்படி தலைப்பிடப்பட்ட 28.02.2015 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் 3 ஆவது பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

கேள்வி ஆவணங்களை 03.03.2015 ஆம் திகதியிலிருந்து 16.03.2015 ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை வேலைநாளில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா. 2000 கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி. றூ.கேதீஸ்வரன்,
தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-280)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 09 06 1932

உதிர்வு 05 02 2015



### அமரர் தம்பிப்பிள்ளை சிவலிங்கம்

05.02.2015 ஆம் திகதி சிவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் இழப்புச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலம்,கண்ணீர் அஞ்சலிகள் மூலம் அனுதாபம் தெரிவித்த பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், வியாபார தாபன, சுகாதாரத்துறை சார்ந்த அனைத்து தரப்பு உத்தியோகத்தர்கள், வங்கித்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு 07.03.2015 ஆம் திகதி சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் . அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவசோதி பவனம்,
வதிரி வீதி,
உடுப்பிட்டி.

ப.சிவகுமார், சி.சுமதி RDHS Office Jaffna,
நா. சந்திரசேனன், ச.சுபத்திரா (ஜேர்மனி),
ஜெ. சங்கர்- சத்யா ஸ்ரூடியோ, ச. சத்தியபாமா
HNB- பருத்தித்துறை.

(9677)


## இராசி பலன்

06.03.2015
மாசி 22, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
பிரதமை பின்னிரவு 2.17 மணிவரை
பூரம் முற்பகல் 11.53 மணிவரை
இராகுகாலம் 10.55-12.25 மணிவரை
சுபநேரம் 6.25-7.55 மணிவரை

வளவன்

**மேடம்:** அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், பிள்ளைகள் தொடர்பான செலவுகள் ஏற்படலாம்.

**இடபம்:** தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** மனோ தைரியம் கூடும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நற்கீர்த்தியுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, செலவுகள் அதிகரிக்கும், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகமான நாள், ஆழ்ந்த சிந்தையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மாதர் நட்புண்டு.

**கன்னி:** சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** தனதானியச் சேர்க்கைகள் இடம் பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு:** எதிர்பாராத செலவுகள் இடம் பெறலாம், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, வேலைகள் உடனுக்குடன் முடியாது இழுத்தடிக்கப்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**கும்பம்:** மனோ தைரியம் கூடும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகமுண்டு.

**மீனம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மாபெரும் போர் சென். ஜோன்ஸ் சிறந்த ஆரம்பம்










ஜெனிபிளமிங்கின் அபாரமான சதம் மூலம் வடக்கின் மாபெரும் போரின் முதல்நாள் முடிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி வலுவான நிலையில் உள்ளது.

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கும் இடையிலான 109ஆவது கிரிக்கெட் போட்டி நேற்று வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் இரு கல்லூரி ரசிகர்கள் மத்தியில் மேள தாளத்துடன் கோலகலமாக ஆரம்பமாகியது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணித் தலைவர் பத்திநாதன் நிரோஜன் முதலில் களத் தடுப்பை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி ஜெனி பிளமிங்கின் சதம், கபில்ராஜின் அரைச்சதம்மற்றும் கானாமிர்தன், துவாரகசீலன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சென்.ஜோன்ஸ் 7 விக்கெட் இழப்பிற்கு 300 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.


துடுப்பாட்டத்தில் ஜெனி பிளமிங் 196 பந்துகளுக்கு முகம் கொடுத்து 19 நான்குகள் உட்பட 107 ஓட்டங்களைக் குவித்தார்.

10 வருடங்களின் பின்னர் வடக்கின் பெரும் போர் கிரிக்கெட்டில் இம்முறையே சதம் அடி க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









கபில்ராஜ் 143 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள் ஒரு ஆறு ஓட்டங்கள் உட்பட 50 ஓட்டங்களையும் கானாமிர்தன் 78 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள் உட்பட 33 ஓட்டத்தினையும் துவாரகசீலன் 32 பந்துகளில் 3 நான்குகள் ஒரு ஆறு ஓட்டங்கள் உட்ட 33 ஓட்டத்தினை பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ் மத்திய கல்லூரி அணி சார்பாக மதூசன் 22.5 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 77 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

நிந்துசன் 9 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் அலன்ராஜ் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட45 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து ஒருவிக்கெட்டினையும்.

திரீசன் 8 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 18 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினார்.

பின்னர் தனது முதலாவது இனிங்சிக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி நேற்றைய முதல் நாள் முடிவில் 8 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 9 ஓட்டங்களை பெற்றுள்ளது.

களத்தில் டினோஜன் 5 ஓட்டத்துடனும் கோமிதன் 3 ஓட்டத்துடனும் உள்ளனர்.

போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு நாட்களுக்கு மட்டுமே இந்த அரசாங்கம் இருக்கும்

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நூறு நாட்கள் வேலைத் திட்டத்தினை ஆதரிக்க வேண்டும் என்பதற்காகவே தேசிய அரசாங்கத்தினை ஆதரிக்கின்றோம். நாம் விட்டுக்கொடுப்புடனும் எமது கட்சியின் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படுவதனாலுமே ரணில் விக்ரமசிங்க பிரதமராகியுள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**



நூறு நாட்கள் மட்டுமே இந்த அரசாங்கம் இருக்குமென நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவம் மாற்றமடைந்துள்ளதே தவிர கட்சியில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை. அதேபோல் உண்மையான அரசாங்கம் எதுவென்பதில் மக்கள் குழப்பத்தில் உள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு ஜனாதிபதியாகியுள்ளார். தற்போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஆவார்.

அதேபோல் பாராளுமன்றில் பெரும்பான்மை எம்மிடம் உள்ள போதும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில்விக்ரமசிங்க பிரதமராகியுள்ளார். இவ்வாறான தொரு குழப்பத்தில் தேசிய அரசாங்கம் நகர்கின்றது.

எனினும் நாம் விட்டுக்கொடுப்புடனும் எமது கட்சியின் தலைமைத்துவத்துக்கு கட்டுப்படுவதனாலுமே ரணில் விக்ரமசிங்க பிரதமராகியுள்ளார். பாராளுமன்றின் பெரும்பான்மை எமக்கு உள்ள போதிலும் 49 ஆசனங்களுடன் உள்ள ஐக்கிய தேசிய கட்சிக்கே பிரதமர் மற்றும் அமைச்சுப்பதவிகள் கிடைத்துள்ளன.

எனவே எமது விட்டுக்கொடுப்பு மற்றும் எமது கட்சியின் கட்டளையினை மதிப்பதன் காரணத்தினாலுமே ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியமைத்துள்ளது என்பதை மறந்து விடக்கூடாது. இம்முறைமை அடுத்த பொதுத் தேர்தலில் மாற்றமடையும்.

இம்முறை இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தலைமைத்துவ மாற்றத்தினை ஏற்படுத்தி நல்லாட்சியினை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே தேசிய அரசாங்கம் உருவாகியுள்ளது.

இதன்போது தேசிய அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தினை ஆதரிக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டதற்கமைய நாம் இவர்களின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தினை ஆதரித்துள்ளோம். இன்று 50 நாட்கள் முடிவடைந்துள்ளன.

எஞ்சியுள்ள 50 நாட்கள் வரையில்தான் இவர்களுடன் எமது உறவு இருக்கப்போகின்றது. எனவே இதுவரையில் இவர்கள் செய்தது என்ன ? எஞ்சியுள்ள நாட்களில் இவர்கள் செய்யப்போவது என்னவென்பது தொடர்பில் நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சியின் இவ் ஆட்சி வெறும் நூறு நாட்கள் மட்டுமே என்பதை இவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் எப்படியும் பொதுத்தேர்தலுக்கு சென்றாக வேண்டும். எனவே அடுத்து வரவிருக்கும் பொதுத்தேர்தலின் போது ஆட்சியமைப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றது.

கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் அனைவரும் கலந்தாலோசித்து வருகின்றோம். அதேவேளை அடுத்த பொதுத்தேர்தல் நடத்தப்படுமாயின் அரசியல் அமைப்பு மாற்றத்துடனேயே இடம்பெற வேண்டும். வெறுமனே 18 ஆவது திருத்தத்தினை இல்லாதொழித்து 19 ஆவது திருத்தத்தினை கொண்டு வருவதால் மட்டும் பலனில்லை.

தேர்தல் முறையிலும் மாற்றத்தினை கொண்டு வர வேண்டும். ஜனாதிபதி ஓர் கட்சியிலும் பிரதமர் அதே கட்சியிலும் இருக்கும் வரையில் அரசாங்கம் சிறப்பாக கொண்டு செல்ல முடியும். ஆனால் ஜனாதிபதி ஒரு கட்சியாகவும், பிரதமர் வேறு கட்சியாகவும் இருக்கும் பட்சத்தில் சிக்கல்கள் ஏற்படும். 2001 ஆம் ஆண்டும் இந்நிலைமை ஏற்பட்டது. எனவே இதனை தடுக்க வேண்டுமாயின் தேர்தல் முறைமையில் மாற்றங்களை கொண்டு வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## உள்ளூராட்சி தேர்தல்களை காலம் தாழ்த்தக் கூடாது

### ஐ.தே.க.கோரிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை காலம் தாழ்த்தக் கூடாது என ஐக்கிய மக்கள் முன்னணி கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. பொதுத் தேர்தல் என்ற போர்வையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை அரசாங்கம் காலம் தாழ்த்தக் கூடாது என ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் சிரிமசிறி ஹபுவாரச்சி கோரியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒத்தி வைத்தால் மேலும் ஊழல் மோசடிகளே அதிகரிக்கும். பாலியல் குற்றவாளிகள், திருடர்கள், ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோர் தற்போதைய உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கின்றார்கள்.

இவர்களை விரட்டியடித்து, மதிநுட்பமான இளைஞர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்ய வேண்டும். பொதுத் தேர்தலுக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டால் நிர்வாக பொறுப்புக்களை ஆணையாளர் ஒருவரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

## தவறிவிட்டது

யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆவணங்கள் அடங்கிய கைப்பை ஒன்று நேற்று முன்தினம் தவறவிடப்பட்டுள்ளது.

உடுப்பிட்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் வழியில் இந்த ஆவணங்கள் மற்றும் வங்கிப் புத்தகங்கள் என்பன தவறவிடப்பட்டுள்ளன.

இதனைக் கண்டெடுத்தவர்கள் பயனாளிகளின் நன்மைகருதி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

## பொய்க்குற்றச்சாட்டு சுமத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாம்

### சஜின் வாஸ் குணவர்தன தெரிவிப்பு



(கொழும்பு)

பொய்க் குற்றச்சாட்டு சுமத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இரத்மலானை விமான நிலையப் பிரச்சினை, அம்பலாங்கொடையில் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றிற்காக எரிபொருள் பெற்றுக் கொண்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 17 கோடி ரூபா கடன் செலுத்த வேண்டியுள்ளது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உரிய ஆதாரத்துடன் நிரூபிக்கப்படாவிட்டால், குற்றஞ் சுமத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனத்திற்கு 17 கோடி ரூபா கடன் செலுத்தப்படவுள்ளது என்பது பாரிய பொய்யாகும்.

அவ்வாறு கடன் செலுத்த வேண்டியிருந்தால் அதனை நிரூபிக்குமாறு பெற்றோலிய வள கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு சவால் விடுக்கின்றேன்.

கையூட்டல், மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் எனக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த இரண்டு முறைப்பாடுகள் தொடர்பிலும் வாக்குமூலங்கள் அளித்துள்ளேன். விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் அது குறித்து விரிவாக பேச விரும்பவில்லை.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடனுக்கு எரிபொருள் விற்பனை செய்யாது. என்னை அரசியலிலிருந்து ஓரம் கட்டும் முயற்சியாகவே இதனைக் கருதுகின்றேன்.

எல்லோரையும் கள்ளன், கள்ளன் என்று வீதிகளில் கோவைகளை எடுத்துக் கொண்டு சென்று போலிப் பிரசாரங்களை செய்ய வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன் என சஜின் வாஸ் குணவர்தன சிங்கள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 80.5 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4221 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 40 செவ் 2 இல்<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/4231 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 54 செவ் 1 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4225 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 17 1/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HNDIT, BIT<br>தொ.இ: G/4232 |
| பிறப்பு: 1987 NON RC<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: தனியார் கனடா PR<br>தொ.இ: B/4227 | பிறப்பு: 1981 NON RC<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 43 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/4234 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 15 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.COM/ அரச தொழில்<br>தொ.இ: B/4230 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 43<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BABM, PGDM<br>தொ.இ: G/4238 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச பரிசோதனைகளும் சக்கர நாற்காலி வழங்கலும்


(யாழ்ப்பாணம்)

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் செரிபரல் பால்சிலங்கா பௌண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடத்தப்படும் மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட சிகிச்சை முகாமொன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணிவரையும் இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியிலுள்ள யாழ். ஜெய்ப்பூர் நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சிகிச்சை முகாமில் பங்குபற்றும் சிறுவர்களுக்கு கண் மற்றும் பல் வைத்திய நிபுணர்களின் இலவச பரிசோதனைகளும் தேவையானவர்களுக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள மூளை முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் அவர்களது உதவியாளர்களுக்கும் மேற்படி சிகிச்சை முகாமில் கலந்து கொள்வதற்காக இலவச போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இச்சிகிச்சை முகாம் தொடர்பான மேலதிக விபரங்களை 021 222 2574 அல்லது 021 321 7354 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியுமென யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன பதில் தலைவர் டாக்டர் திருமதி எஸ். தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (இ-3)




# தமிழினத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிகோரி நல்லூரில் இன்று உண்ணாவிரதப்போர்

(யாழ்ப்பாணம்)

**ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற அநீதிகளுக்கு ஐ.நாவிடம் நீதி கோரி நல்லூரில் இன்று வெள்ளிக்கிழமை தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. இப் போராட்டத்தினை காணாமற்போன உறவுகள், மாகாண மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.**

இன்று காலை 8 மணியளவில் நல்லூர்க் கந்தன் ஆலயம் முன்பாக ஆரம்பமாகவுள்ள இத்தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பல்கலைக்கழக சமூகம் உட்பட பல பொது அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஈழத்தில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலைகள், போர்க்குற்றங்கள் என்பவை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை பிற்போடப்பட்டுள்ள நிலையில் அதனைக் கண்டித்தும் எதிர்வரும் செப்டெம்பர் மாதமாவது அறிவித்தபடி அறிக்கையினை ஐ.நா. ஆணையாளர் வெளியிட வேண்டும் என வலியுறுத்தியும் இப்போராட்டம் இடம்பெறவுள்ளது.

மேலும் போர்க்காலத்தில் கடத்தப்பட்டு காணாமற் போனோரின் விடுதலை, காணாமற் போகச் செய்யப்பட்டோரின் தகவலை வெளியிடக் கோரியும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, மீள்குடியேற்றம், இராணுவப் பிரசன்னம் குறைப்பு போன்றவற்றினையும் இத்தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தின் போது வலியுறுத்தப்படவுள்ளது.

இன்றைய தினம் ஆரம்பமாகும் இப்போராட்டம் தொடர்ச்சியாக நடத்தப்படவுள்ளதோடு போராட்டத் தின் முடிவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு முடித்து வைக்கவுமுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

மேலும் இப்போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்த் தேசிய இளையோர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டு முள்ளிவாய்க்காலில் இருந்து ஆரம்பித்து யாழ். நோக்கிய நடைபவனியும் இத்தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தின் இரண்டாம் நாளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த நடைபவனி ஈழத்தமிழ் மக்களுக்கு ஐ.நாவிடம் நீதிகோரி நேற்றைய தினம் மாலை 3 மணியளவில் முள்ளிவாய்க்காலில் இருந்து ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.ஈழத்தமிழ் மக்களின் நீதிகோரி நடைபெறவுள்ள இத்தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் அனைவரையும் அணிதிரளுமாறு வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் அறிவித்துள்ளார். (இ-4)



யாழ்.செய்திகள்



வடக்கு மாகாண 2014 ஆம் ஆண்டிற்கான சிறந்த சுகாதார சேவைக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்டவர்கள் மேடையில் நிற்பதனையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் விருதினை வழங்கி வைப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

## திருவள்ளுவர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை நடத்தும் திருவள்ளுவர் தினவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருவள்ளுவர் மகா சபைத் தலைவர் நாகன் கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பரியோவான் கல்லூரி ஓய்வு நிலை தலைமையாசிரியர் செ.ப. ஜீவானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர் உதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் முள்ளந்தண்டுவடப் பாதிப்பினால் கழுத்திற்குக் கீழாக இயக்கம் இல்லாதவர்கள் 24 பேரும் மற்றும் இடுப்பிற்குக் கீழாக இயக்கமில்லாதவர்கள் 121 பேருமாக மொத்தம் 145 பேர் உள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்காரணமாக் முள்ளந்தண்டுவடப் பாதிப்பிள்குள்ளானவர்களுக்குத் தேவையான பொருத்தமான உதவிகளை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக முன்னெடுக்கும் பொருட்டு தேவையான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எனவே முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்றவர்கள் அனைவரும் தத்தமது பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு அவர்களால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் தமது விபரங்களைப் பதிவு செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் அவ்வாறு தாமாகவே நேரடியாகச் சென்று பதிவுசெய்ய இயலாதவர்கள் இருப்பின் அவர்கள் தங்களின் அயலவர்கள் மற்றும் உறவினர்கள் மூலம் சமூக சேவை உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொண்டு எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் இவ் விபரங்களைச் சமர்ப்பிக்கும்படி வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ-5)

## இயல், இசை நாடகவிழா

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர் வருடாந்தம் நடத்தும் இயல், இசை, நாடகவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கவியரங்கு, பட்டிமன்றம், இசையரங்கு (வாய்ப்பாட்டு, வாத்தியம்) வில்லுப்பாட்டு, நடனம், அரச, சமூக, இசை நாடகங்கள், கூத்து போன்ற நிகழ்ச்சிகளை மேடை ஏற்ற விரும்பும் கலைஞர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியுடன் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியினர் கேட்டுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளுக்கு இரசாயன திரவம் கடத்திய வழக்கில் மூவருக்கு 7 ஆண்டு சிறை!

(சென்னை)

மதுரை சமத்துவபுரத்தில் உள்ள ஒரு வீட்டில் கொள்கலனில் பதுக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் தயாரிக்க பயன்படுத்தும் இரசாயன திரவத்தை கடந்த 8.4.2008இல் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

இது தொடர்பாக இலங்கை அகதிகள் கண்ணன், எட்வர்டு ஜெயக்குமார், இலங்கை நாதன், நவநீத கிருஷ்ணன் ஆகிய 4 பேரை பொலிஸார் கைது செய்தனர். பிணையில் விடுதலையான கண்ணன், பின்னர் தலைமறைவாகி விட்டார்.

இந்த வழக்கு மதுரை 4ஆவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரிக்கப்பட்டது. அரசு சட்டத்தரணி என்.செல்வம் வாதிடும்போது, கல்லூரி ஆய்வகத்துக்கு தேவைப்படுவதாக போலி அடையாள அட்டையைக் காட்டி அந்த இரசாயன திரவத்தை பெங்களூரில் வாங்கி உள்ளனர். அவற்றை மதுரையிலிருந்து மண்டபம் அகதிகள் முகாமுக்கு கொணடு சென்று, அங்கிருந்து இலங்கைக்கு கடத்தவும், விடுதலைப்புலிகளுக்கு வழங்கவும் திட்டமிட்டிருந்தனர். இந்த இரசாயன திரவம் வெடிபொருள் தயாரிக்க பயன்படும் மூலப் பொருளாகும் என்றார்.

இதையடுத்து நவநீதகிருஷ்ணன், எட்வர்டு ஜெயக்குமார், இலங்கைநாதன் ஆகிய 3 பேருக்கும் தலா 7 ஆண்டு சிறைத்தண்டனையும், தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தும் நீதிபதி என்.வெங்கடவரதன் உத்தரவிட்டார். (இ-5)

# பேசும் படம்-44

இடம்:- யாழ்ப்பாணம்



பல்துலக்கும் நாய்!
இனி நாம கடிச்சா யாருக்கும் விசர் வராதெல்லே...

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

**மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com**
**facebook: www.facebook.com/valam.puri.16**
**தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,**
**இல.03, 2-ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**அல்லது நேரில்.**

அனுப்பியவர்:
ஜெ.பேனியல்
மன்னார்

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

# நடத்துநர்களுக்கான நேர்முகத்தேர்வு

இலங்கை போக்குவரத்துச் சபையின் நடத்துநர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு இலங்கை போக்குவரத்துச் சபை, இலக்கம் 200, கிருளவீதி, நாரகேன்பிட்டி, கொழும்பு-05 என்ற முகவரியில் இடம்பெற வுள்ளது.

தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பாடசாலை விடுகைப் பத்திரத்துடன் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப் பட்ட கல்விச் சான்றிதழ், சேவை அனுபவச் சான்றிதழ், பிரதேச செயலரினால் மேல் ஒப்பமிடப்பட்ட கிராம சேவையாளர் சான்றி தழ் என்பவற்றின் போட்டோ கொப்பி (நிழற் பிரதிகளுடன்) குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மனிதவள முகாமையாளர் அறிவித்தார். (இ-3)

# தேர்தல் நடத்தப்படாவிடின் ஐ.தே.க. வீதியிலிறங்கும்

(கொழும்பு)

**அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் மக்களுக்கு வாக்குறுதி அளித்ததைப் போன்று தேர்தல் நடத்தப்படாவிடின் ஐ.தே.கட்சி என்ற அடிப்படையில் நாம் வீதியில் இறங்கிப் போராடுவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.**



தம்மிடமுள்ள சுகபோக வாழ்க்கையை தக்க வைத்து கொள்ளும் நோக்கிலே தேசிய அரசாங்கத்தை கட்டமைக்க சுதந்திரக் கட்சியினர் விரும்புகின்றனர். இதற்கமைய தற்போது உண்மையான மக்களுடைய ஆணை தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தில் தற்போது 54 நாட்கள் முடிவு கண்டுள்ளன. இதனூடாக நல்லாட்சி பயணத்திற்கு நல்லதொரு சமிக்ஞை காட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் எளிமையான முறையில் தனது ஆட்சியை முன்னெடுத்து வருகின்றனர். வீண் விரயங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய மக்களுக்கு ஏற்ற ஆட்சியை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். அதேபோன்று பல சலுகைகளையும் பெற்றுக்கொடுப்போம்.மேலும் தற்போது தேசிய அரசாங்கம் தொடர்பில் பரவலாக பேசப்படுகிறது. ஜனாதிபதி தேர்தலின் போது தனது சுய இலாபத்திற்காக மகிந்த ராஜபக்ஷவிற்காக பிரசாரம் செய்து மைத்திரிபால சிறிசேனவை எதிர்த்தவர்கள் இன்று தேசிய அரசாங்கம் அமைப்பதில் ஆர்வம் செலுத்துகின்றனர்.

தேசிய அரசாங்கம் என்பது தனியொருவரின் சுகபோகங்களை பிரதிநிதித்துவம் கொண்ட நிகழ்ச்சி நிரலாகும். தற்போது நாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. புதிதாக மக்கள் ஆணை பாராளுமன்றத்திடம் இல்லை. தற்போதைய பாராளுமன்ற பெரும்பான்மைக்கு மக்கள் ஆணை கிடையாது.

இதன் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத்திட்டத்தில் பாராளுமன்ற தேர்தலை உள்ளடக்கினோம்.

இதற்கமைய இதுவரை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியது போன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என்ற அந்த வாக்குறுதியையும் நிலை நிறுத்துவோம்.

இந்நிலையில் இது தொடர்பில் அரச தரப்பில் முரண்பாடான கருத்துகள் எழுந்து வருகின்றன. தேர்தல் முறைமை மாற்ற வேண்டும் என்பதில் ஐ.தே.கவும் உறுதியாகவே உள்ளது. எனினும் புதிய முறைமையின் கீழ் தேர்தல் நடத்துவதற்கு உரியகால நேரம் குறைவாகவே உள்ளன.

அவ்வாறு புதிய முறைமை தேர்தல் நடத்த வேண்டுமாயின் தேர்தல் ஆணையாளருக்கு யோசனை வழங்க வேண்டும். அதற்கு அவகாசம் போதாமலுள்ளது.

எனினும் இது தொடர்பில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் வீதியில் இறங்கி போராட போவதாக எச்சரிக்கின்றன.

இது குறித்து எவ்வித ஆட்சேபமும் எமக்கு இல்லை. இது ஜனநாயக நாடாகும். இங்கே தமது உரிமைகளுக்காக போராட்டம் நடத்த முடியும். தற்போது ஜனநா யக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த கட்சிகள் தேர்தல் வேண்டாம் என போராடும் போது மக்களின் வாக்குறுதிகள் தேர்தலை நடத்தாமல் போனால் ஐ.தே.கவை பிரதிநிதித்துவப் படுத்தி நாமும வீதியிலிறங்கி போராடுவோம்.

எமக்கு அதற்கான உரிமை உள்ளது.அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இளையோர் போராடும் போது நாமும் போராடுவதில் தவறேதுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தேர்தல் முறையில் விருப்புத் தெரிவை மாத்திரம் மாற்றுங்கள்

விக்ரமபாகு கருணாரட்ன கோரிக்கை



(கொழும்பு)

நடைமுறை தேர்தல் முறையில் உள்ள விருப்பு வாக்குமுறையை மாத்திரமே நீக்க வேண்டும் என்று நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் தேர்தல் முறையை மீண்டும் தொகுதி வாரிக்கு மாற்றும் திட்டமும் உள்ளடங்குகிறது.

அதிலும் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை பாதிக்காத வண்ணம் செயற்படுவது குறித்தும் கவனம் செலுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொகுதிவாரி முறையை மாத்திரம் மீண்டும் நேரடியாக கொண்டு வருவதனால் பாரிய பிரச்சினைகள் ஏற்படும் என்று கருணாரட்ன தெரிவித்தார்.

எனவே தற்போதுள்ள விருப்புத் தெரிவு வாக்குமுறையை மாத்திரம் மாற்றும் நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது செய்யப்பட்டுள்ள பகீரதியிடம் ரி.ஐ.டி புலனாய்வுப்பிரிவு விசாரணை

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(கொழும்பு)

**பிரான்ஸ் திரும்பும் போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட முன்னாள் விடுதலைப்புலிகளின் கடற்படை பெண் தளபதி என கூறப்படும் முருகேசு பகீரதி மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**



அவரின் மேற்பார்வை அல்லது ஆலோசனைகளின் கீழ் இங்கு தாக்குதல்கள் நடத்தப்பட்டதா? என்று பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் (ரி.ஐ.டி)தற்போது விசாரணை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

41 வயதான பகீரதி கைது செய்யப்படும் போது அவருடன் இருந்த அவரது 8 வயது பிரான்ஸ் குடியுரிமையைப் பெற்ற மகளும் நீதிமன்ற அனுமதியுடன் 72 மணி நேர தடுப்புக் காவலின் கீழ் உள்ள பகீரதியுடனேயே தங்கியுள்ளதாகவும் இது தொடர்பில் பிரான்ஸ் தூதுவராலயத்துக்கு தகவல்கள் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அஜித் ரோஹண சுட்டிக்காட்டினார்.

பிரான்ஸிலிருந்து கடந்த மாதம் இலங்கை வந்திருந்த பகீரதியும் அவரது 8 வயது மகளும் கிளிநொச்சியில் உள்ள பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் விடுமுறையை கழித்துவிட்டு திரும்பும் வழியிலேயே கடந்த திங்கட்கிழமை அதிகாலை 5.40 மணியளவில் விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டார். டுபாய் ஊடாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட போதே அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.


விடுதலைப் புலிகள் அமைப்பில் மூன்று ஆண்டுகள் இருந்துள்ள பகீரதி 2005 ஆம் ஆண்டில் பிரான்ஸ் செல்ல முன்னர் பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளில் பங்கெடுத்திருந்ததாக சந்தேகிக்கப்படுவதாகவும் அது தொடர்பிலேயே தற்போது விசாரணை இடம் பெறுவதாகவும் குறிப்பிட்ட அஜித் ரோஹண இதுவரை அவர் நேரடியாக தாக்குதலுடன் தொடர்புபட்டமை குறித்தான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை என தெரிவித்தார்.

உண்மையில் இந்தப் பெண் 1997ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டுவரை கடற்புலிகளின் தலைவியாக இருந்துள்ளார். அவர் 2005 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளார். அவர் அவரது காலப்பகுதியில் இலங்கை கடற்படை மீது நடத்தப்பட்ட பல தாக்குதல்களுக்கு தலைமை தாங்கியுள்ளதாக தெரியவருகின்றது. நேரடியாக அவர் தலைமை தாங்கி தாக்குதல்களை நடத்தினாரா? என்பதை உறுதியாக கூறமுடியாத போதும் அவரது மேற்பார்வை, ஆலோசனையின் கீழ் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டதாக கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையிலேயே விசாரணைகள் நடைபெறுகின்றன.

அத்துடன் தற்கொலை குண்டுதாரிப் பெண்களை தயார்ப்படுத்தும் திட்டங்களிலும் அவர் பங்கெடுத்தாரா? என்பது குறித்தும் விசாரணைகளில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி.அர்ப்பணிப்புடன் செயற்படும்

## தலைவர் அநுர எம்.பி.தெரிவிப்பு



நாட்டில் மீண்டும் இனவாதம் ஏற்படுவதை தடுக்கும் பொறுப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இருப்பதாக தெரிவித்துள்ள ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாட்டில் இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த எவர் செயற்பாடுகளை முன்னெடுக்காவிட்டாலும் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த ஜே.வி.பி அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மகரகமவில் நேற்று முன்தினம் நடை பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,மகிந்த தேர்தலில் தோற்று வீட்டுக்கு சென்று சும்மா இருக்கவில்லை. அவர் ஈழம் பற்றிய கதைகளை பேசி இனவாதத்தை தூண்ட முயற்சித்து வருகிறார்.

மகிந்தவின் நிழல் மற்றும் மடி இல்லாமல் இருக்க முடியாத தினேஷ், வாசுதேவ, கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோருக்கே மீண்டும் மகிந்த தேவைப்படுகிறார்.

காரணம் கடந்த 25 வருட அரசியல் வரலாற்றில் தினேஷ், வாசுதேவ ஆகியோர் தமது கட்சிகள ஊடாக தேர்தலில் நின்று வெற்றி பெற்றதில்லை. கம்மன்பிலவுக்கு கட்சியே இல்லை. வீரவன்ச பற்றி பேசி எந்த பிரயோசனமும் இல்லை.

இவர்களுக்கு தமக்கென ஒரு கட்சியில்லை. மக்கள் செல்வாக்கும் இல்லை. அரசியலில் கைவிடப்பட்டவர்களான இந்த அணியில் மகிந்தவை மீண்டும் கொண்டு வர துடிக்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ, சுமணதாச ஆகியோர் இணைந்து தேர்தல் ஒன்றை நடத்தி, மகிந்த அதில் தோல்வியடைந்தார். இதனால், மீண்டும் அரசியலுக்கு வருவது பற்றி அவர் சிந்திக்க தேவையில்லை.

9 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்து, நிதி, அரசியல், ஊடகம் என அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தி தேர்தல் பிரசாரம் செய்து தோல்வியடைந்தார் என்றால், மக்களின் ஆணைக்கு தலை வணங்கி அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும்.

பிரதமர் பதவிக்கு போட்டியிடுவது, அதில் தோல்வியடைந்தால் தென் மாகாண சபைக்கு போட்டியிடுவது அதிலும் தோல்வியடைந்தால் தங்காலை பிரதேச சபைக்கு போட்டியிடுவது அதிலும் தோல்வியடைந்தால், கூட்டுறவு தேர்தலில் போட்டியிடுவது என தீர்மானிக்கும் உரிமை மகிந்தவுக்கு உள்ளது.

வீட்டுக்கு சென்ற பின் ஓய்வெடுங்கள் என்றுதான் நாங்கள் அவரை கேட்கிறோம். இதனை விடுத்து மீண்டும் நாட்டில் இனவாதத்தை தூண்ட வேண்டும். அரசியலுக்கு அதனை அடிப்படையாக பயன்படுத்த வேண்டாம். இந்த நாடு 30 ஆண்டுகள் இனவாதத்தினால் பாதிப்புகளை சந்தித்துள்ளது.

மகிந்த மீண்டும் அரசியலுக்கு வருவாரேயானால், இனவாதத்தை தவிர்த்து விட்டு, அவரது 9 வருட ஆட்சியில் செய்த பொருளாதார பணிகள், ஜனநாயகம், அரசியல் கலாசாரம் பற்றி பேச முடியும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

# நல்லாட்சி அரசாங்கம் நாடு திரும்பிய 10 தமிழர்களைக் கைது செய்துள்ளது

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் நாட்டில் இருந்து வெளியேறிவர்களை மீண்டும் நாடு திரும்புமாறு புதிய அரசாங்கம் அழைப்பு விடுத்த பின்னர், மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து நாடு திரும்பிய சுமார் 10 தமிழர்கள், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையததில் மாத்திரம் இவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பின் இணையத் தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள தனது தாயை பார்ப்பதற்காக 10 வருடங்களுக்கு பின்னர் இலங்கை திரும்பிய 41 வயதான ஒரு பிள்ளையின் தாய் ஒருவர் அண்மையில் கட்டுநாயக்க விமானத்தில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

பிரான்சில் இருந்து தாயை பார்க்க சென்று விட்டு தனது 8 வயது மகளுடன் மீண்டும் பிரான்ஸ் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்ற முருகேசு பகீரதி என்ற பெண்ணை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட இந்த பெண் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, தடுப்பு காவல் உத்தரவின் பேரில் 4ஆவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பகீரதி மூன்று வருடங்கள் கடற்புலி உறுப்பினராக இருந்துள்ளதாகவும் அவர் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

1997 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை கடற்புலி உறுப்பினராக இருந்த பகீரதி, படுகாயம் ஏற்பட்டதன் காரணமாக அந்த அமைப்பில் இருந்து விலகியுள்ளார்.

2003 ஆம் ஆண்டு பிரான்ஸ் குடியுரிமையை பெற்றுக்கொண்ட அவர், இலங்கையர் ஒருவரை தாய்லாந்தில் மணமுடித்து, 2005 ஆம் ஆண்டு பிரான்ஸ் சென்றுள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள நிலையில், நாட்டில் ஏற்பட்டிருக்கும் சுதந்திரமான சூழலை நம்பி, பகீரதி, புற்று நோயால் பாதிக்கப்பட்ட தனது தாயை பார்க்க வந்துள்ளார்.

பரந்தனில் இருக்கும் அவரது வீட்டுக்கு சென்ற பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், அவரிடம் வாக்குமூலம் ஒன்றையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

பகரதியின் கணவரான சுப்பிரமணியம் ஜெயகணேஷ், புலிகளின் சர்வதேச நிதி தொடர்பான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும் பகிரதி சட்ட ரீதியாக தனது கணவரை விவாகரத்து செய்துள்ளதுடன் கணவரிடம் இருந்து மகளுக்கும் அவருக்கும் மாதந்தம் ஜீவனாம்சம் கிடைத்து வருகிறது.

பகீரதியின் மகள் பிரான்சில் கல்வி கற்று வருவதோடு விடுமுறை முடிந்து கடந்த 3 ஆம் திகதி பாடசாலை ஆரம்பித்துள்ளது. இதனடிப்படையிலேயே பகீரதி கடந்த 2 ஆம் திகதி பிரான்ஸ்க்கு புறப்பட்டுச் செல்ல திட்டமிட்டிருந்தார். இது குறித்து பகீரதி வீட்டுக்கு வந்து விசாரணை நடத்திய பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் கூறியிருந்தார்.

பகீரதியின் முன்னாள் கணவரை இலங்கைக்கு கொண்டு வர அவரையோ அவரது மகளையோ தடுத்து வைக்க அதிகாரிகள் எண்ணினால், அது பலன் தராது என பகீரதியின் சகோதரர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் தெரிவித்துள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் குறித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலை புலிகளினால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.


இலங்கையில் கடந்த 30 வருடங்களாக பல்வேறு பிரச்சினைகளுடன் நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் வடபுல மக்கள் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் மற்றும் அத்தியாவசியமான தேவைகள் குறித்தும், இதுவரையில் விடுவிக்கப்படாத நிலையிலுள்ள மக்களின் விவசாய மற்றும் குடியேற்ற காணிகளின் விடுவிப்பு குறித்தும் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடபுல மக்கள் மீள்குடியேறுவதற்கு தயாராகவுள்ளனர் எனவும், அவர்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாமையினால் தாமதமடைந்து வருகின்றது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இராணுவத்தினருடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி சிறந்த தீர்வினை பெற்றுக் கொடுப்பதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத அலுவலகம்



(பொற்பதி)

வடமராட்சி கிழக்கிற்கான கடற்றொழில் பரிசோதகரின் பிரதான அலுவலகம் 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் காணப்படுகிறது.

கடந்தகால யுத்த நடவடிக்கை காரணமாக இந்த அலுவலகம் முற்றாக அழிவடைந்துள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் பெரும்பான்மையான மக்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதனால் கடற்றொழில் பரிசோதகரின் சேவை முக்கிய தேவையாகக் காணப்படுகிறது.

கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரைக்கும் மேற்படி கடற்றொழில் பரிசோதகரின் சேவை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் வாரத்தில் ஒருநாள் இடம்பெற்று வந்தது.

யுத்தம் முடிவடைந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்டு சில ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இக்கட்டடம் புனர்நிர்மாணம் செய்யப்படாத நிலையில் உள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

# நவுறு தீவில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த சிறுவர்கள் கைது

(சிட்னி)

**நவுறுதீவில் அகதிகளின் அடிப்படை உரிமைக்காகவும் அவுஸ்திரேலியாவின் கடும்போக்கு கொள்கையை கண்டித்தும் தங்களது எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகின்றது என்று தெரியாமல் தடுமாறிய சிறுவர்கள் கடந்த 3 தினங்களாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டும் சிறுவர்கள் நிறுத்த மறுத்த காரணத்தினால் 150இக்கும் மேற்பட்டோர் நவுறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த 13 வயதேயான தலைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தின் போது பொலிசாரின் தாக்குதலுக்கு இலக்கான இரு பெண்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நவுறு தீவு பொலிசார் தாக்கியமை, சிறுவர்களை கைது செய் தமை மனித உரிமை மீறல் என அகதிகள் அதிரடி கூட்டணி அமைப்பாளர் இயன் ரிண்டோல் வன்மையாக கண்டித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இலங்கை அகதி விவகாரம்

# உயர்நீதிமன்றம் புதிய உத்தரவு!

பூந்தமல்லி அகதிகள் முகாமில் உள்ள இலங்கையைச் சேர்ந்த மகேஸ்வரன் அங்கே தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பது குறித்து 2 வாரத்துக்குள் பரிசீலித்து உத்தரவு பிறப்பிக்க அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கையைச சேர்ந்த பிரசாந்தி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது, எனது கணவர் மகேஸ்வரன் இலங்கைக்கு எதிராக செயற்பட திட்டமிடுவதாகக் கூறி அவரை கைது செய்து, பூந்தமல்லி அகதிகள் முகாமில் அடைத்தனர்.

100 நாட்களுக்கும் மேலாக முகாமில் வாடும் அவரை விடுவிக்கக்கோரி நான் தொடர்ந்த வழக்கில் அவரை விடுவித்தும், இலங்கைக்கு திரும்பிச் செல்வது தொடர்பாகவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலங்கைக்கு சென்றால் அவருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்த உத்தரவில் மாற்றம் செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

உயர்நீதிமன்ற நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் இவ்வழக்கை விசாரித்து நேற்று முன்தினம் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது,

மகேஸ்வரன் இலங்கைக்கு சென்றால் அவருக்கு பாதுகாப்பு இல்லை என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே, கடந்த டிசெம்பர் மாதம் நான் பிறப்பித்த உத்தரவில் மாற்றம் செய்கிறேன். அந்த உத்தரவில் இலங்கை போவதற்கு மகேஸ்வரன் விரும்புகிறார் என்ற பகுதியை நீக்கிவிட்டு, அவர் அகதிகள் முகாமிலே இருக்க வேண்டுமா, இல்லையா என்பது பற்றி கருணை அடிப்படையில் இரண்டு வாரங்களுக்குள் பரிசீலித்து உத்தரவிட வேண்டும் என்று அரசுக்கு உத்தரவிடப்படுகிறது. இவ்வாறு நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் மேலும் உத்தரவிட்டார். (இ-5)

# கடும் வெள்ளம் காரணமாக தன்சானியாவில் 50பேர் பலி

ஆபிரிக்க கண்டத்தில் உள்ள தன்சானியா நாட்டில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதில் சின்யங்கா பிராந்தியம் முழுவதும் வெள்ளக்காடாக மாறியுள்ளது.

பல்லாயிரக்கணக்கான வீடுகளை வெள்ளம் அடித்து சென்றுவிட்டது. பல கிராமங்கள் மற்ற இடங்களில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளன.

ஏராளமானோர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளனர். இதில் 50க்கும் மேற்பட்டோர் பலியாகி இருப்பதாக தன்சானியா அரசு அறிவித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோரை காணவில்லை.

வீதிகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் மீட்பு குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதிக்கு செல்ல முடியவில்லை.

இதனால் நிலைமை மோசமாக இருப்பதாக அரச நிர்வாகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி கதிரவேல்பிள்ளை தெய்வநாயகம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேல்பிள்ளை தெய்வநாயகம் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு Tooting & Mitchan Community Sports Club, (Opposite Murco Garage), Imperial Fields, Bishopsford Road Morden, Surrey SM4 6BF, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நடராஜா குலேந்திரராஜா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா குலேந்திரராஜா கடந்த 2ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணிக்கு St.John's Norway Cemetery, 256 Kingston Road, Toronto, ON M4L 1S7, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### க.பரமசிவம்பிள்ளை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கணபதி பரமசிவம்பிள்ளை கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி குலசிங்கம் புவனேஸ்வரி

கரணவாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் புவனேஸ்வரி நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கிராய் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவராஜசிங் இராஜேஸ்வரி

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், லண்டன் KENT ஐ வதிவிடமாகவும் கொண்ட சிவராஜசிங் இராஜேஸ்வரி கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் Inters park crematorium என்னும் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நமசிவாயம் தங்கராசா

கரணவாய், மூத்தவிநாயகர் கோயிலடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் தங்கராசா கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி நாகேந்திரா றீட்டா புனிதவதி

குருநாகலை பிறப்பிடமாகவும் இரத்மலானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரா றீட்டா புனிதவதி கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அன்று கல்கிசை மலர்சாலையில் வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்



### திருமதி இரட்ணராஜா சரஸ்வதி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணராஜா சரஸ்வதி நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பரியாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



### திருமதி நடராசா ஸ்ரீதேவி

(ஓய்வு பெற்ற சுருக்கெழுத்தாளர்)

கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஸ்ரீதேவி கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி பயஸ் புஸ்பராணி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட பயஸ் புஸ்பராணி கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு Friedgasse, 69509 Morlenbach, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தண்டனைக்குத் தகுந்த குற்றம்

ஒருநாள் காலையில் அக்பர் தன் அரண்மனை உப்பரிகையில் உலாவிக்கொண்டிருக்கையில், அவர் பார்வை நந்தவனத்தின்மீது சென்றது. அது வசந்த காலம் என்பதால் மரங்களும், செடிகளும் வண்ண மலர்களுடன் பூத்துக் குலுங்க, அவற்றிலிருந்து வீசிய நறுமணம் மனதைக் கிறங்கச் செய்தது. இளங்காலையில் வீசிய தென்றல் அவர் உடலை இதமாக வருடிச் செல்ல, அவர் காற்றில் மிதப்பதைப் போல் உணர்ந்தார்.





இவ்வாறு தன்னை மறந்த நிலையில் உலாவிக் கொண்டிருந்த அக்பர், நந்தவனத்தில் நடந்து செல்லும் வழியில் கல் ஒன்று இருபபதை கவனிக்கத் தவறிவிட்டார். அதில் கால் இடறி இடித்துக்கொள்ள, கால் கட்டை விரலிலிருந்து இரத்தம கசியத் தொடங்கியது. அதுவரை அவர் மனதில் பொங்கிய உற்சாகம் கணத்தில் மறைந்து போக, கோபமும், எரிச்சலும் குடிகொள்ள, அவர் "தோட்டக்காரன் எங்கே? எங்கே இருந்தாலும் வா!" என்று கத்தினார். தோட்டக்காரன் மண் வெட்டியை எடுக்கக் குடிசைக்குள் சென்று இருந்ததால், அக்பரின் கூக்குரல் அவன் காதில் விழவில்லை. கூப்பிட்ட குரலுக்கு தோட்டக்காரன் வராததால், அக்பரின் கோபம் தலைக்கு ஏறியது. அரண்மனையை அடைந்தவுடன் காவல் அதிகாரியை அழைத்தவர், நடந்தவற்றைக் கூறி தோட்டக்காரனை தூக்கிலிடும்படி உத்தரவிட்டார்.



காவல் அதிகாரக்கு அதைக் கேட்டு தூக்கிவாரிப்போட்டது. ஒரு சாதாரணத் தவறுக்கு மரண தண்டனையா என்று அதிர்ந்து போனார். ஆனால் சக்கரவர்த்தி மிகவும் கோபமாக இருந்ததால், அவரிடம் எதுவும் கேட்கத் துணிச்சலின்றி, அவர் பின்வாங்கினார். பின்னர் தன்னுடைய இரு காவலர்களை அழைத்துக் கொண்டு, தோட்டக்காரனை நோக்கிச் சென்றார். காலை நேரத்தில் காவல் அதிகாரி தன் ஆட்களுடன் தன்னைத் தேடி வருவது கண்டு தோட்டக்காரன் திடுக்கிட்டான். "என்ன விடயம் ஐயா?" என்று நடுங்கும் குரலில் கேட்க, "தோட்டத்தில் சக்கரவர்த்தி உலாவும் போது ஒரு கல்லில் அவர் காலை இடித்துக் கொண்டார். அது உன்னுடைய தவறு என்பதால் உனக்கு நாளை காலை தூக்குத் தண்டனை!" என்றார் அதிகாரி.

இதைக் கேட்டதும் தோட்டக்காரன் துடித்தான். அவன் மனைவியோ அதைக் கேட்டு அலறி அழுதாள். "கால் இடித்துக் கொண்டதற்கு தூக்குத் தண்டனையா? இது என்ன அநியாயம்? நீங்கள் சக்கரவர்த்தியிடம் எடுத்துச் சொல்லக் கூடாதா?" என்றாள். "எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. உன் கணவன் தோட்டத்தில் விட்டு வைத்த கல் இப்போது அவன் தலையிலேயே விழப் போகிறது" என்ற அதிகாரி சற்று யோசித்தபின், "தூக்குத்தண்டனை நாளைக்குத்தான், இன்னும் ஒருநாள் சமயம் உள்ளது. நீ பீர்பாலிடம் போய் உன் கணவனைப் பற்றிக் கூறி விடுவிக்க முயற்சி செய்" என்று சொல்லிவிட்டு, தோட்டக்காரனின் கைகளில் விலங்கு மாட்டி இழுத்துச் சென்றனர்..........

(தொடரும்)

## 06.03.2015 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1447 - ஐந்தாம் நிக்கலாஸ் திருத்தந்தை ஆனார்.
- 1479 - கனாரி தீவுகளை போர்த்துக்கல் காஸ்டில் பேரரசுக்கு வழங்கியது.
- 1521 - பேர்டினண்ட் மகலன் குவாம் தீவை அடைந்தார்.
- 1788 - கைதிகளைக் குடியமர்த்தும் திட்டத்தில் முதற்படியாக முதலாவது தொகுதி கைதிகள் அடங்கிய கப்பல் நோர்போக் தீவை அடைந்தது.
- 1790 - மதுரை மாவட்டம் உருவாக்கப்பட்டது.
- 1836 - டெக்சாசில் அலாமோ நகரை மெக்சிக்கோ படைகள் தாக்கிக் கைப்பற்றினர்.
- 1869 - திமீத்ரி மென்டெலீவ் தனது முதலாவது ஆவர்த்தன அட்டவணையை சமர்ப்பித்தார்.
- 1940 - குளிர்காலப் போர்: பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்குமிடையில் தற்காலிகப் போர் ஓய்வு ஒப்பந்தம் ஏற்பட்டது.
- 1945 - ருமேனியாவில் கம்யூனிச அரசு பதவிக்கு வந்தது.
- 1946 - வியட்நாம் போர்: ஹோ சி மின் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி பிரான்ஸ் வியட்நாமை பிரெஞ்சு ஒன்றியம் மற்றும் இந்தோசீனக் கூட்டமைப்பினுள் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பகுதியாக ஏற்றுக் கொண்டது.
- 1953 - ஸ்டாலினின் மறைவையடுத்து சோவியத்தின் பிரதமராகவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை செயலாளராகவும் கியோர்கி மாலென்கோவ் பதவியேற்றார்.
- 1957 - ஐக்கிய இராச்சியக் குடியேற்ற நாடுகளான கோல்ட் கோஸ்ட் மற்றும் பிரித்தானிய டொகோலாந்து ஆகியன இணைந்து கானா குடியரசு என்ற பெயரில் விடுதலை பெற்றன.
- 1964 - காசியஸ் கிளே தனது பெயரை அதிகார பூர்வமாக முகமது அலி என மாற்றிக் கொண்டார்.
- 1967 - திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது.
- 1975 - ஈரானும் ஈராக்கும் தமது எல்லை தொடர்பாக உடன்பாட்டிற்கு வந்தன.

### பிறப்புக்கள்

- **1475 - மைக்கலாஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியர (இ. 1564)**
- 1508 - ஹுமாயூன், இரண்டாவது மொகலாயப் பேரரசர் (இ. 1556)
- 1869 - சேர் ஜேம்ஸ் எமர்சன் டென்னெண்ட், எழுத்தாளர், பயணி, இலங்கைக்கான பிரித்தானிய காலனித்துவ செயலாளர் (பி. 1804)
- 1928 - காபிரியேல் மார்க்கெஸ், நோபல் பரிசு பெற்ற கொலம்பிய எழுத்தாளர்
- 1937 - வலன்டீனா தெரெஷ்கோவா, சோவியத் விண்வெளி வீரர், விண்ணுக்குச் சென்ற முதற் பெண்
- 1948 - ஸ்டீஃபன் ஷ்வார்ட்ஸ், அமெரிக்காவைச் சேர்ந்த பாடலாசிரியர், இசையமைப்பாளர்
- 1954 - ம. சா. அறிவுடைநம்பி, தமிழ்ப் பேராசிரியர் (இ. 2014)

### இறப்புக்கள்

- 1888 - [illegible] (பி. 1832)
- 1973 - பெர்ல் பக், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மைக்கலாஞ்சலோ

மைக்கலாஞ்சலோ டி லொடோவிக்கோ புவோனரோட்டி சிமோனி, 1475 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம திகதி பிறந்தார். இவர் ஒரு இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியரும், சிற்பியும், கவிஞரும், கட்டடக் கலைஞருமாவார்.

மைக்கலாஞ்சலோ எனப் பொதுவாக அறியப்படும் இவரது கலைசார்ந்த பல்துறைத் திறமையின் உயர்ந்த தரம் காரணமாகச் சமகாலத்தவரான லியொனார்டோ டா வின்சியுடன் சேர்த்து இவரும் மறுமலர்ச்சிக்காலத் தந்தையெனக் கணிக்கப்படுகின்றார்.

மைக்கலாஞ்சலோவின் நீண்டகால வாழ்க்கையில், அவர் படைத்தவைகள் அனைத்தும் அவரது அதிசயக்கத்தக்க திறமைக்குச் சான்றாக அமைகின்றன. கடிதத் தொடர்புகள், வரைபடங்கள், நினைவுக் குறிப்புகள என இவர் எழுதிக் குவித்தவை ஏராளம். இவைகளையும் சேர்த்தால், 16 ஆம் நூற்றாண்டில் அதிகமாக ஆவணப்படுத்தப்பட்ட கலைஞர் இவரே எனலாம்.

மைக்கலாஞ்சலோ தனது 23ஆம் வயதில் செதுக்கிய புகழ் பெற்ற படைப்புக்களான, தாயும் சேயும் அல்லது பியேட்டா (Picta), டேவிட் ஆகியவை 16ஆம் நூற்றாண்டின் இருபதுகளின் பிற்பகுதியிலும், முப்பதுகளின் ஆரம்பத்திலும் உருவாக்கப்பட்டவை.

ஆறு அடி உயரம் உடைய இத்தாலிய மொழியில் "Pietà" என்று அழைக்கப்படும் பியேட்டா சிலை, உலகப் புகழ்பெற்ற கலைஞர் மைக்கலாஞ்சலோ என்பவரால் செதுக்கப்பட்டு, வத்திக்கான் நகரிலுள்ள பேதுரு பெருங்கோவிலின் உள்ளே வைக்கப்பட்டுள்ள கலையழகுமிக்க பளிங்குச் சிலை ஆகும். இச்சிலை சிலுவையில் தொங்கி இறந்த இயேசுவை அவர்தம் அன்னை மரியா தம் மடியில் கிடத்தியிருப்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது.

இவர் வாழ்ந்த காலத்திலேயே இவரது இரண்டு வாழ்க்கை வரலாறுகள் வெளியிடப்பட்டது. இவற்றில் ஒன்றை எழுதிய ஜோர்ஜியோ வசாரி (Giorgio Vasari). இவரை, மறுமலர்ச்சிக் காலச் சாதனைகள் அனைத்துக்கும் சிகரம் போன்றவர் எனப் புகழ்ந்துள்ளார்.

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

72

...ஒரு காலத்தில் டென்னிஸ் வீரராக விளங்கி, பிறகு அமெரிக்காவில் குடியேறி, ஹாலிவுட்டில் பல வெற்றிப் படங்களைத் தயாரித்த விஜய் அமிர்தராஜும், லண்டன் வாழ் இந்தியர் டாக்டர் முரளி மனோகரும் கூட்டாக எடுத்த படம். மெட்ரோ பிலிம் கார்ப்பரேஷன் பேனரில் படம் தயாராகியது.

ஹாலிவுட் நட்சத்திரங்களான பரெட்ஸ் டிம்லி, சார்லிபிரில், அன்னா நிகடெஸ் ஆகியோருடன் இணைந்து ரஜினி நடித்தார்.

### சொந்தக்குரல்

இந்தப் படத்தில் ரஜினி சொந்தக் குரலில் பேசி நடித்தார். இந்தப் படத்தை, டிவைட் லிட்டில் டைரக்ட் செய்தார். அயல்நாட்டு கலை நுட்ப வல்லுனர்கள் பங்கெடுத்துக் கொண்ட இப்படத்தில், தமிழகத்தைச் சேர்ந்த தாஸ் சண்டைக் காட்சிகளை அமைத்தார்.

பின்னணி இசையை இளையராஜா அமைத்தார். படத்தின் சென்னை நகர விநியோக உரிமையை டி.ராஜேந்தர் ஏற்றார்.

### டாக்சி டிரைவர்

இந்தப் படத்தில், டாக்சி டிரைவராக ரஜினி நடித்தார்.

### படத்தின் கதை சுவையானது.

பிளட் ஸ்டோன் என்பது விலை உயர்ந்த வைரக்கல். அதை வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு வருகிறார்கள். அது ரஜினியின் டாக்சிக்குள் விழுந்து, பிறகு ரஜினியின் கையில் கிடைக்கிறது. அந்த விலை உயர்ந்த கல், கதாநாயகியிடம் இருப்பதாக வில்லனின் ஆட்கள் தவறாக கருதி, அவளைக் கடத்திச் செல்கிறார்கள். கல்லைக் கொடுத்தால்தான் அவளை விடுவிக்க முடியும் என்று சொல்கிறார்கள்.


துப்பாக்கியுடன் சீறிப்பாயும் ரஜினி (பிளட் ஸ்டோன் படத்தில்)

அவளைத்தேடி இந்தியாவுக்கு வரும் ஹீரோவும், ரஜினியும் நண்பர்களாகி விடுகிறார்கள். விலை உயர்ந்த கல்லை. ஏன் அவர்களிடம் கொடுக்க வேண்டும்? எனக்கு பக்கபலமாக பலர் இருக்கிறார்கள். வில்லனை அழித்து விடுவோம்.

அந்தப் பெண்ணை மீட்டு விடலாம். பிறகு பிளட்ஸ்டோனை நாமே பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று ஹீரோவிடம் ரஜினி கூறுகிறார். இதற்கு ஹீரோ ஒப்புக் கொள்கிறார்.

இருவரும் போராடி எப்படி வில்லனை ஒழிதது, கதாநாயகியை மீட்கிறார்கள் என்பதுதான் கதை.

ரஜினியின் 119ஆவது படமாக, 7-10-1988 இல் "பிளட்ஸ்டோன்" வெளிவந்தது. சர்வதேச அளவில், வெற்றிப்பட வரிசையில் சேர்ந்தது. சென்னையிலும், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களிலும் திரையிடப்பட்டு, சில வாரங்கள் ஓடியது.

ரஜினியின் புதுமாதிரியான நடிப்பு, ஹாலிவுட்காரர்களை வெகுவாகக் கவர்ந்தது.

### அனுபவம்

ஆங்கிலப்படத்தில் நடித்த அனுபவம் பற்றி ரஜினிகாந்த் அப்போது அளித்த பேட்டியில் கூறியதாவது:-

ஹாலிவுட்டில் ஒரு படத்தை எடுக்க வேண்டும் என்றால், அதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பே திட்டமிடுவார்கள். ஆறு மாத காலம் தேடி, ஷுட் டிங் லொகேஷனை தேர்ந்தெடுத்த பிறகு ஸ்கிரிப்ட் தயார் பண்ணுவார் கள்.

ஸ்கிரிப்ட் எழுதி, டிஸ்கஸ் பண்ணி பண்ணி, வசனம் முதல் கொண்டு... ஷாட் கூட இப்படித் தான் அமைக்க வேண்டும் என்று டேபிள் ஒர்க் பண்ணி விடுவார்கள். இருபதாயிரம் அடிகள் எடுத்து, பதினைந்தாயிரம் அடிகளாக குறைக்கலாம் என்கிறதெல்லாம் அங்கே கிடையாது. லொகேஷனுக்கு போன உடன் கதையை இப்படி மாற்றிக் கொள்ளலாம். வசனத்தில் இதை சேர்த்துக் கொள்ளலாம்...

அப்படி பண்ணலாம். இப்படி பண்ணலாம் என்கிற வித்தை எல்லாம் இல்லை. ஸ்கிரிப்டில் என்ன இருக்கிறதோ, எந்த ஷாட் இருக்கிறதோ, என்ன டயலாக் இருக்கிறதோ அதைத்தான் எடுப்பார்கள்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 94

....ஆனா ஒண்ணு. ஒங்க ரெண்டு பேரையும் கரை சேக்காம என் கட்டை வேகாது.

தான் ஒண்ணு நெனைச்சா தெய்வம் ஒண்ணு நெனைக்கும்ன்னு சொல்லுவாக.

ஆனா செத்துச் சீலப் பேனாகிப் போன சுப்பஞ்செட்டியார் கதையக் கேட்டா தெய்வம் ஏதொண்ணும் நெனைக்கலன்னுதான் சொல்லத் தோணும்.

ஏன்னா அப்படியெல்லாம் ஒரு கருமாயத்தக் கற்பனை பண்ணி நெனைக்க தெய்வத்துக்கே தெரியாது.

அடியே கருவாச்சி! எனக்கும் ஒனக்கும் சின்ன வயசிலயிருந்தே வித்தியாசம்டி.

நீ கறுப்பு. நான் செவப்பு;

நீ மாடு மேய்க்கப் போன; நான் பள்ளிக்கூடம் போனேன்.

ஒனக்குத்தாய் இருந்திச்சு; தகப்பன் இல்ல.

எனக்குத் தகப்பன் இருக்கத் தாயில்லை.


எனக்கு வெளியூர்ல கல்யாணம்.

ஒனக்கு உள்ளூர்ல கல்யாணம்.

ஒனக்கு பிள்ள இருக்கு. புருசன் இல்ல.

எனக்குப் புருசன் இருக்கப் பிள்ள இல்ல.

கருவாச்சி மகன் அழகுசிங்கத்த வாங்கி மடியில போட்டுக்கிட்டு



சோகத்த மறந்து கெக்கக்.. கெக்கக்.., கெக்கன்னு சிரிக்கிறா கனகம்.

துன்பம்ங்கிறது விருந்தாடி மாதிரி தான்.

எப்பவாச்சும் வந்தாத்தான் மரியாதை.

நித்தம் நித்தம் துன்பம் வந்தா மனசு மரத்துப் போகுதா இல்லையா?

அப்படி மரத்து மறந்து போனாக பொம்பளைக ரெண்டு பேரும்.

யம்மா கனகாம்பரம் வீட்டுக்குப் போதாயி. ஒரு விவேசம் வந்திருக்கு போறபோக்குல சொல்லிட்டுப் போனாரு அம்மைய நாயக்கரு.

என்னமோ ஏதோன்னு லொங்கு லொங்கு லொங்குன்னு ஓடுறா கனகாம்பரம் ஒடம்பத்துக்கிட்டு. வீட்டுக்கு வந்து பாத்தவ நெலப்படிய ஒரு கையிலயும் நெஞ்ச ஒரு கையிலயும் புடிச்சு நின்னே போனா.

பவளத்துக்குச் சொக்குப்பொடி போட்டு சோங்கு பண்ணிக்கிட்டிருக்கான் கனகம் புருசன் முத்துக்காமு.

ஏ பவளம்.. இங்க வா பிள்ள வா.

ஒன்னிய நான் கடிச்சாதின்னுபிடப் போறேன்.

என்னமோ சொல்றாகளே ஊரெல்லாம். நீ பேன் பாக்குறதுல பெருங் கொண்ட கையின்னு.

ஒங்க அக்கா கூடப்படுத்துப் படுத்து எந்தலையில ஏறிக் கெடக்கு ஏகப்பட்ட பேணு.

வா கண்ணு வா மண்ட காயுதுடி மாமனுக்கு.

வந்து பேன் பாரு வா.

மச்சினிச்சிக்காக வெல்லப்பாகு மாதிரி எளகி ஓடுன மூஞ்சி பொண்டாட்டியப் பாத்ததும் கருப்பட்டி மாதிரி இறுக்கிப் போச்சு.

ஏண்டி புருசன் வீட்லயிருந்து ஓடி வந்தவ அப்பன் வீட்லயும் தங்குறதில்லையா? எங்கடி போயிட்டு வாரவ?

நியாயப்படி கேள்விகேக்க பாத்தியப்பட்டவளும் பாதிக்கப்பட்டவளும் அவதான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பீடை, காவிகளின் கட்டுப்பாட்டில் RIDL தொழில்நுட்பம்


பீடை, காவிகளின் கட்டுப்பாட்டில் ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை பல்வேறு தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பாரம்பரிய முறைகள் தொடக்கம் பிறப்புரிமை ரீதியில் மாற்றி அமைக்கப்பட்ட அங்கிகளை பயன்படுத்துதல் வரை பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. தற்போது பீடை, காவிகளின் கட்டுப்பாடு எனும் தொனிப்பொருளில் இருந்து முகாமைத்துவம் எனும் தொனிப்பொருளே அதிகம் பாவிக்கப்படுகின்றது. தனியே ஒரு வகையான கட்டுப்பாட்டு முறையை பயன்படுத்தாமல் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறையே தற்போது அனைவராலும் பரிந்துரைக்கப்பட்ட முறையாக கொள்ளப்படுகின்றது.


பீடை, காவிகளின் கட்டுப்பாட்டில் பிறப்புரிமை ரீதியில் மாற்றி அமைக்கப்பட்ட அங்கிகளை பயன்படுத்துகின்ற தொழில்நுட்பங்களில் RIDL மிகமுக்கிய மானதாகும். RIDL என்பது Release of Insects with dominant lethality ஆகும். அதாவது ஆட்சியான கொல் பரமபரை அலகுகளை கொண்ட அங்கிகளை விடுவித்தல் என்பதாகும்.

இவ் RIDL தொழில்நுட்பம் Medfly இன் குடம்பியில் Oxford பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளினால் 2005 ஆண்டு விபரிக்கப்பட்டது. அக் கண்டுபிடிப்பில் ஈடுபட்ட மூத்த விஞ்ஞானியான Luke Alphey வர்த்தக ரீதியில் தயாரிப்பதற்காக Oxitec எனும நிறுவனத்தை ஸ்தாபித்து செயற்படுத்திக் கொண்டு இருக்கின்றார்.

பொதுவாக RIDL தொழில் நுட்பத்தில் கொல்லும் தன்மை, பெண் காவிகள், பீடைகளை கொல்வதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. சூழலுக்கு ஆண் அங்கிகள் மாத்திரம் விடுவிக்கப்படுகின்றன. இவை அவ் கொல் பரம்பரையலகுகளை காவுகின்றன. பெரும்பாலும் காவிகளில் பெண் அங்கிகளே நோயை ஏற்படுத்துகின்றன. இது போன்ற காரணங்களை கருத்திற்கொணடு ஆண் அங்கிகள் மாத்திரம் சூழலுக்கு விடுவித்தல் பாதுகாப்பானதாக கருதப்படுகின்றது. அத்துடன் ஒரு ஆண் அங்கி சூழலில் காணப்படும் பல பெண் அங்கிகளுடன் இனக் கலப்பில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதால் ஆண் அங்கிகள் விடுவித்தல் பெண் அங்கிகளை விடுவிபபதிலும் பார்க்க வினைத்திறன் வாய்ந்த செயற்பாடாக இருக்கும்.

### RIDL தொழில் நுட்பத்தின் படிகள




1. DNA மீளச் சேர்தல் தொழில் நுட்பம் (Recombinant DNA Technology) மூலம் அங்கிகளின் பிறப்புரிமை அமைப்பு மாற்றி அமைக்கப்படுகின்றது. அங்கி ஓரின நுக நிலையில் ஆட்சியான கொல்பரம்பரையலகினை கொண்டுள்ளவாறு உருவாக்கப்படும்.

இக் கொல் பரம்பரையலகானது பெண் அங்கியை மாத்திரம் கொல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும். பிறப்புரிமை ரீதியில் மாற்றும் செயற்பாடு பொதுவாக குறித்த அங்கியின் முட்டை பருவ நிலையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

2.பின்பு அதிக எண்ணிக்கையில் வளர்க்கப்படும் இதன்போது இவற்றின் உணவில் Tetracycline உம் சேர்த்து வழங்கப்படும். Tetracycline உள்ள உணவு பெண் அங்கிகள் கொல் பரம்பரையலகின் மூலம் கொல்லப்படுவதை தடுக்கின்றது.

3. அங்கிகளை சூழலுக்கு விடுவிக்கும் செயன்முறைக்கு முன் Tetracycline அற்ற உணவு வழங்கப்படும். இதனால் வளர்க்கும் தொகுதியில் உள்ள பெண் அங்கிகள் அனைத்தும் இறந்துவிடும். இதனால் அத் தொகுதியினுள் அனைத்தும் ஆண் அங்கிகளாகவே காணப்படும். இலகுவாக ஆண், பெண் அங்கிகளை வேறுபடுத்தி ஆண் அங்கிகளை மாத்திரம் விடுவிக்கக்கூடியதாக இருப்பது இம் முறையில் காணப்படும் மிகச் சிறந்த அனுகூலம் ஆகும்.

4. பின்பு இவ் ஆண் அங்கிகள் அனைத்தும் சூழலுக்கு விடுவிக்கப்படும்

5. ஆண் அங்கிகள் ஏற்கனவே சூழலில் காணப்படும் பெண் அங்கிகளுடன் இனம் கலக்கின்றன.


6.இனக்கலப்பின் போது கொல் பரம்பரையலகானது அவற்றின் சந்ததிக்கு கடத்தப்படுகின்றது.

7. சூழலில் இயற்கையில் Tetracycline காணப்படுவதில்லை, எனவே சந்ததியில் உள்ள பெண் அங்கிகள் யாவும் இதரநுக நிலையில் ஆட்சியான கொல்பரம்பரையலகின் தாக்கத்தின் மூலம் இறக்கும்.

8. இச் சந்ததியில் தோன்றும் ஆண் அங்கிகளில் இக் கொல் பரம்பரையலகுகள் இதரநுக நிலையில் காணப்படும் இவை இறக்கமாட்டாது. இவை இனம் கலந்து உருவாகும் சந்ததியில் உள்ள பெண்களில் 50% ஆனவை கொல் பரம்பரையலகின் தாக்கத்தினால் இறக்கும்.

9.குறிப்பிட்டகாலத்தின் பின் இரண்டாவது தடவையாக பிறப்புரிமை ரீதியில் மாற்றி அமைக்கப்பட்ட ஆண் அங்கிகள் சூழலுக்கு விடுவிக்கப்படும்.

கொல் பரம்பரையலகுகளின் செயற்பாடு ஆனது பெரும்பாலும் உணவு அடிப்படையிலேயே கட்டுப்படுத்தப்படுகின்றது. இது தவிர வெப்பநிலை (Temperature), ஒளி பெறும் கால அளவு (Photoperiod) போன்றவற்றின் அடிப்படையிலும் கொல் பரம்பலையலகின் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தமுடியும். Tetra cycline தவிர Actin, Carboxy peptidase என்பனவும் ஒழுங்குபடுத்தலில் பயன்படுத்தப்படுகின்றது




Tetracycline : Mediterian fruit fly, Mexican fruit fly

Actin : Aedes aegypti

Carboxy peptidase : Anopheles gambiae, Aedes aegypti

RIDL transgene ஆனது teto 21, minimal promoter, tTA protein உள்ள gene ஐ கொண்டிருக்கும். Tetracycline இல்லாத போது Minimal Promoter மூலம் tTA புரதம் தொகும் gene தூண்டப்பட்டு tTA புரதம் தொகுக்கப்படும். தொகுக்கப்பட்ட புரதம் teto gene இல் இணைந்து அதிகளவில் tTA புரதம் தொகுப்பது தூண்டப்படும். இது இறப்பை ஏற்படுத்தும். ஆனால் Tetra cycline உள்ள போது tTA protein உடன் tetracycline இணைவதால் teto உடன் tTA protein இணைவது தடுக்கப்படும். இதனால் இறப்பு தவிர்க்கப்படும்.

தற்போது Bisex RIDL தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. இதில் Tetracycline இல்லாத போது ஆண், பெண் அங்கிகள் இரண்டும் இறக்கும். வேறுபட்ட பருவநிலைகளில் இறப்பினை ஏற்படுத்தக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டிருக்கும்.

அங்கியானது பிறப்புரிமை ரீதியில் சரியான முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிவதற்கும், சூழலில் இவ் அங்கிகளை இனம் காண்பதற்கும், சில Marker gene பயன்படுத்தப்படுகின்றது இவை, Marine corals, Jelly fish என்பவற்றில் இருந்து இந்த gene கள் பொதுவாக பெறப்படுகின்றன. இவற்றினை Fluorescent filter மூலம் அவதானிப்பதன் மூலம் அடையாளம் கண்டு கொள்ளமுடியும். உயிரியல் சார்ந்த Markers ஐ பயன்படுத்துவது அங்கிகளுக்கு பாதிப்பினைத் தராது.

Conventional sterile insect technique உடன் ஒப்பிடும்போது RIDL மிகச்சிறந்த தொழில் நுட்பம் ஆகும். ஆண், பெண் அங்கிகளை வேறுபடுத்துவது இலகு, Conventional SIT இல் Radiation மூலம் அங்கிகள் மாற்றி அமைக்கப்படுவதால் அவை சூழலில் உள்ள ஏனைய அங்கிகளுடன் போட்டி போடுவது கடினமானதாகும். கட்டுப்படுத்தும் முறையிலும் வேறுபாடுண்டு.

இரசாயனப் பதார்த்தங்களை அடிப்பதனால் அவற்றுக்கு எதிரான குலவகைகள் இயற்கைத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு, இவற்றின் மூலம் மனிதனுக்கு நன்மை பயக்கும் அங்கிகளும் இறப்பதற் கான வாய்ப்புக்கள் அதிகம். RIDL தொழில் நுட்பம் சூழலுக்கு ஏற்படுத் தும் பாதிப்பு குறைவு அத்துடன் குறித்த ஒரு இனத்தை மட்டும் கட்டுப்படுத்தும். இதனால் சூழலில் உள்ள ஏனைய அங்கிகளுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது. RIDL அங்கிகளை கொள்வனவு செய்வது அதிக செலவினம் ஆகும். இருபபினும் காலத்திற் கேற்ப சிறந்த முறையாக கொள்ளப்படுகின்றது.

**புஸ்பலிங்கம் சுரேந்தர்**
Demonstrator
விலங்கியல் துறை
யாழ். பல்கலைக்கழகம

## வாரத்திற்கு ஒரு புதிர்! 131

சந்திராயன் என்ற இந்தியாவின் நிலாவுக்கான விண்வெளி ஓடம் எந்த ஆண்டு ஏவப்பட்டது.?

புதிர் 131 இற்கான விடைகளை 16.03.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி: திரு.க.கஜபதி

ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 130 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

ஏ.தெய்வேந்திரம்
கதிர்காம வாசா,
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி

புதிர் 130 க்கான கேள்வியும் விடையும்:
Atherosclerosis என்றால் என்ன?
குருதி நாடியின் உட்புறச் சுவரில் பதிவுகள் ஏற்படுதல்.

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 131

சரியான விடை:-.......................................
முழுப்பெயர்:-.......................................
முகவரி:-.......................................
தொ.பே. இல:.......................................
கையொப்பம்:.......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மண் அகழ்வைத் தடுக்க வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் எம்.தியாகராஜா கோரிக்கை

நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட குஞ்சுக்குளம் கிராமத்தில் உள்ள கனகராயன் ஆற்றில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றப்பட்டு வெளிமாவட்டத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. அருகில் வசிக்கும் மக்கள் தமது தேவைகளுக்கு ஒரு லோட் மணல் கூட ஏற்றமுடியாமல் உள்ளது.

வவுனியா பிரதேச செயலக பிரிவில் கள்ளிக்குளம் கிராமத்தில் சுமார் 15-20 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் கிரவல் தோண்டப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. இதனால் அங்கு சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகின்றது ஆகவே. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மாகாண சபை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வடமாகாண சபை உறுப்பினர் எம்.தியாகராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமாகாண சபையின் 25 ஆவது அமர்வின்போது. கிராமப்புற மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து அவர் சபை யின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அப்போது அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

புளியங்குளத்தில் அமைந்துள்ள திவிநெகும பயிற்சி நிலையத்தையும் விவசாயப் பண்ணையையும் திணைக்களத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனால். பெருமளவு நிதி முதலீட்டில் செயற்பட்டு வந்த இந்த பயிற்சி நிலையமும் பண்ணையும் செயலிழக்க நேரிடும். இவற்றில் பணியாற்றுகின்ற 20க்கும் மேற்பட்ட மக்கள். இதனால் பாதிக்கப்படக்கூடிய அபாயமும். பண்ணைத் தொழிலையே தமது ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள 50 குடும்பங்கள் வேலை இழக்கக் கூடிய ஆபத்தும் ஏற்படவுள்ளது.

ஆகவே. இவற்றை வடமாகாண விவசாயத் துறை அமைச்சு பொறுப்பேற்று தொடர்ந்து இவற்றைச் சரியான முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பொறுப்பேற்றுச் செயற்படுத்துவதுடன், அங்கு பல காலமாகத் தற்காலிக அடிப்படையில் பணியாற்றி வருபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழுங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை. வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மகிழங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள புதியவேலர் சினனக்குளம் கிராமத்தில் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் குடியேறிய குடும்பங்களுக்கு இதுவரையிலும். காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

இதனால் அந்த ஊர் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றனர். தற்போது அந்தக் கிராமம் வீட்டுத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும். காணி அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தினால், அந்தக் குடும்பங்கள் வீட்டுத்திட்ட நன்மையைப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

எனவே. அந்தக் குடும்பங்கள் பல வருடங்களாகத் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்துள்ள அவர்களுடைய காணிகளுக்கு உடனடியாகக் காணி அனுமதிப்பத்திரம் வழுங்க முடியாவிட்டாலும்கூட. அவர்கள் அங்கு நீண்ட காலமாக வாழ்ந்து வந்ததை பிரதேச செயலாளரின் ஊடாக ஆவணம் ஒன்றின் ஊடாக உறுதி செய்து. அவர்களுக்கான வீட்டுத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (அ-2)

## நாட்டில்

# 3001 முதல் 3500 மாணவர்களை கொண்ட 115 பாடசாலைகளுள்ளன

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் தொகை ரீதியான பாடசாலை விபரத்தை கல்வி அமைச்சின் புள்ளி விபரக்கிளை வெளியிட்டுள்ளது.


இதற்கமைய 9 ஆயிரத்து 905 அரச பாடசாலைகள் இயங்கிவரும் நிலையில், ஒன்றுதொடக்கம் 50 மாணவர்களைக் கொண்ட ஆயிரத்து 652 பாடசாலைகளும் 51 தொடக்கம் 100 மாணவர்களைக் கொண்ட ஆயிரத்து 537 பாடசாலைகளும் 101 தொடக்கம் 200 மாணவர்களைக் கொண்ட ஆயிரத்து 996 பாடசாலைகளும் உள்ளன.

இதேவேளை 201 தொடக்கம் 500 மாணவர்களைக் கொண்ட 2 ஆயிரத்து 451 பாடசாலைகளும் 501 தொடக்கம் ஆயிரம் வரையான மாணவர்களைக் கொண்ட ஆயிரத்து 287 பாடசாலைகளும், ஆயிரத்து ஒன்று தொடக்கம் ஆயிரத்து 500 மாணவர்களைக் கொண்ட 451 பாடசாலைகளும் உள்ளன.

அத்துடன் ஆயிரத்து 501 தொடக்கம் 2 ஆயிரம் மாணவர்களைக் கொண்ட 211 பாடசாலைகளும் 2 ஆயிரத்து ஒன்று தொடக்கம் 2 ஆயிரத்து 500 மாணவர்களைக் கொண்ட 120 பாடசாலைகளும் 2 ஆயிரத்து 501 தொடக்கம் 3 ஆயிரம் மாணவர்களைக் கொண்ட 77 பாடசாலைகளும் 3 ஆயிரத்து ஒன்று தொடக்கம் 3 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட 115 பாடசாலைகளும் உள்ளதாக கல்வி அமைச்சின் புள்ளி விபரத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-15)




# இந்தியப் பிரதமர் மோடி மன்னாருக்கு செல்வார்



(மன்னார்)

இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 14 ஆம் திகதி மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்திய பிரதமரின் மன்னார் விஜயம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அவசர வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் மன்னார் ஆகாஸ் விடுதியில் இடம் பெற்றது.

வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன். இந்திய துணைத் தூதரகத்தின் அரசியல் பிரதிநிதி எஸ்.டி.மூர்த்தி ஆகியோருக்கு இடையிலேயே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி. மன்னாருக்கு வருகை தரும் போது அவரை வரவேற்பது தொடர்பாகவும். வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத்திட்டம் தொடர்பாகவும் எமது மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் விசேட மகஜரொன்றை இந்தியப்பிரதமரிடம் கையளிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ-2)

# ஆரோக்கியபுரத்தில் பாலம் புனரமைப்பு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி. ஆரோக்கியபுரம் பகுதியில் அமைந்துள்ள பாலத்தின் புனரமைப்புப் பணிகள் 1.6 மில்லியன் ரூபாய் செலவில் கடந்த வாரம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கிளிநொச்சி. முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதம பொறியலாளர் வ.ஜெயானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்.

கிளிநொச்சி அக்கராயனிலிருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதியில் துணுக்காயின் பாலங்குளத்தின் வான் பாயும் பகுதியில் இந்தப் பாலம் அமைந்துள்ளது. மழை வெள்ளத்தால் சேதமடைந்த இந்தப் பாலம் போக்குவரத்து இடையூறாகவிருந்தது.

இந்தப் பாலம் சேதமடைந்ததன் காரணமாக. கிளிநொச்சியிலிருந்து முழுங்காவிலுக்கான பேருந்து மற்றும் வாகனங்களின் போக்குவரத்து சேவை மேற்கொள்ள முடியாதிருந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால். விரைவான புனரமைப்புப் பணிகளில் தற்போது முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-2)



கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ் விழாவும் 12 ஆவது திருக்குறள் மாநாடும் நேற்று முன்தினம் முற்பகல் 9 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் முதலாம் நாள் நிகழ்வு நடைபெற்ற போது...
(படங்கள்:சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முன்னாள் அதிபருடன் 5 நிமிடங்கள்

எனது நாட்டில் இடம்பெற்ற கிளர்ச்சி போன்றே உங்களுடைய நாட்டிலும் கிளர்ச்சி இடம்பெறுகிறது. இதற்குப் பின்னால் இந்தியாவின் றோ அமைப்பு செயற்படுகிறது என ராஜபக்ச குறிப்பிட்டார்.

***இவ்வாறு இலங்கையின் முன்னாள் ஆட்சியாளருடனான சந்திப்புக் குறித்து, பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் Dawn நாளிதழில், மலீகா ஹமித் சித்திக் என்ற பெண் ஊடகவியலாளர் விபரித்துள்ளார்.***

சனிக்கிழமை காலை எட்டு மணி.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காட்டுப் பச்சை நிறத்தாலான இல்லமான Carlton House இற்கு வெளியே நான் காத்திருந்தேன். அது ஒரு சுமாரான, தாழ்ந்த கூரையைக் கொண்ட இல்லமாகக் காணப்பட்டது. இந்த இல்லத்தின் முன்னால் நடுத்தர அளவிலான பலகையில் மகிந்த ராஜபக்சவின் உருவப்படம் காணப்பட்டது.

ஐம்பது நாட்களுக்கு முன்னர் வெளியாகிய ஜனாதிபதித் தேர்தலின் அதிர்ச்சித் தோல்வியின் பின்னர் தற்போது இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது சொந்த நகரான தங்கல்லையில் தங்கியுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, தான் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்ற அதீத நம்பிக்கையுடன் தனது பதவிக்காலம் முடிவதற்கு முன்னர் 1977 இல் அடுத்த தேர்தலை நடத்தி அதில் தோல்வியுற்றது போன்ற நிலையே தற்போது மகிந்த ராஜபக்சவுக்கும் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மகிந்த ராஜபக்சவும் தனது சோதிடரின் ஆலோசனையின் பேரிலேயே தனது ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் தேர்தலை நடத்தினார்.

தங்கல்லையில் உள்ள மகிந்த ராஜபக்சவின் வதிவிட இல்லத்தில் இரண்டு காவற்துறையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுகின்றனர். இவர்கள் ஒலிவ் பச்சை நிற சீருடைகளை அணிந்துள்ளதுடன், இவர்களுடன் கடமையில் ஈடுபடும் மூன்று புலனாய்வு அதிகாரிகளும் மெல்லிய அரைக்கை சேட்டுடனும் கறுப்பு நிற நீளக் காற்சட்டையுடனும் காணப்பட்டனர்.

அவர்கள் மேம்போக்காக என்னைப் பார்த்ததுடன், சாய்ந்து செல்லும் வீதியை உற்றுநோக்கினர். சேலை அணிந்த பெண்களும், சேட் மற்றும் நிற சாரங்களை அணிந்திருந்த ஆண்களும் சீருடை தரித்த பாடசாலைச் சிறார்களும் அந்த வீதியால் பயணித்துக் கொண்டிருந்தனர்.

சிலர் முன்னாள் ஜனாதிபதியின் வதிவிட இல்லத்தின் வாயிற் கதவுகளில் காத்திருந்தனர். மிகப் பெரிய மரம் ஒன்றின் நிழலின் கீழ் அமைந்திருந்த இந்த வாயிற் கதவில் காத்திருந்த மக்கள் சிலர் தமது பிள்ளைகளையும் கூட்டி வந்திருந்தனர். இந்தச் சிறார்கள் 'மகிந்த ராஜாவிடம்' (மகிந்த அரசன்) ஆசிர்வாதம் பெறுவதற்காகவே காத்திருந்தனர்.

மகிந்த ராஜபக்ச வழமையாக தங்கல்லையிலுள்ள தனது வதிவிட இல்லத்தில் தங்கியிருப்பார். ஆனால் கடந்த இரண்டு நாட்களாக இவர் கொழும்பில் இருந்துள்ளார். இவர் தற்போது தங்கல்லையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

நான் வியாழக்கிழமையும் மகிந்த ராஜபக்சவின் இல்லத்திற்கு வந்திருந்த போது இதனை அறிந்திருந்தேன். கொழும்பு கல்கிசையில் தங்கியிருந்தபோது தற்செயலாக நான் சந்தித்த நபர் ஒருவர் மகிந்த ராஜபக்சவை நான சந்திக்க வேண்டும் எனக் கூறினார்.

இவர்தான் நான் முன்னாள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான தொடர்பாளராகச் செயற்பட்டார். 'தனது தேர்தல் தோல்வி தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி இதுவரையில் ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கவில்லை. இவரைச் சந்தித்து நீங்கள் இது தொடர்பாக ஊடகத்தில் எழுதவேண்டும்' என எனது தொடர்பாளர் என்னிடம் கூறினார்.



இதன்பிரகாரம் நான் ராஜபக்சவின் நெருங்கிய கூட்டாளியான நிசாந்த சண்டாபரனவுக்காக காத்துக் கொண்டிருந்தேன். இவர் என்னை ராஜபக்சவிடம் கூட்டிச் செல்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார்.

மகிந்த ராஜபக்சவின் வதிவிட இல்லத்தைச் சூழவிருந்த வழக்கமான காட்சிகள் என்னைக் குழப்பத்திற்கு உள்ளாக்கியது. மகிந்த ராஜபக்சவின் 'கார்ல்டன் இல்லத்திற்கு' அடுத்ததாக மருந்தகம் ஒன்று காணப்பட்டது. மக்கள் அங்கே தமக்குத் தேவை யான மருந்துகளை வாங்குகின்றனர்.

இந்த இல்லத்திற்கு எதிராக தொழிற்சங்க அலுவலகம் ஒன்று காணப்பட்டது. இதற்கு அடுத்ததாக தீயணைப்புப் படையினரின் அலுவலகமும் திரையரங்கு ஒன்றும் அமைந்துள்ளன.

சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் எவரும் இங்கு நிறுத்தப்படவில்லை. இங்கு எவ்வித சோதனைச் சாவடிகளும் காணப்படவில்லை. பாதுகாப்பு அரண்களுடன் கூடிய நுழைவாயில் காணப்படவில்லை.

எமது முன்னாள் ஜனாதிபதி தனது சொந்த நகரான கராச்சியில் பாதுகாப்புக் கோட்டை ஒன்றுக்குள் தங்கியுள்ளார் என்பதை எவரும் இந்த இடத்தில் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

மணி எட்டரை. பல பேருந்துகள் 'கார்ல்டன் இல்லத்திற்கு' அருகில் மக்களை இறக்கி விட்டுச் சென்றன. தமக்குச் சிறப்பான உடைகளுடன் வந்திருந்த மக்கள் இந்த இல்லத்திற்குள் சென்றனர்.

இவ்வாறான நிகழ்வானது தற்போதும் மகிந்த ராஜபக்ச தனது நாட்டு மக்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளார் என்பதையே உணர்த்தி நிற்கிறது.

ஜனவரி 09 அன்று ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டு இரண்டு நாட்களிலிருந்து ஒவ்வொரு நாளும் மக்கள் காலை நான்கு மணியிலிருந்து இந்த இல்லத்திற்கு வெளியே காத்திருக்கத் தொடங்குவார்கள் என அங்கிருந்த காவற்துறை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

'முதல்நாள் பல ஆயிரக் கணக்கான மக்கள் முன்னாள் ஜனாதிபதியைப் பார்ப்பதற்காக வந்தனர். இதன் பின்னர் ஒவ்வொரு நாளும் பல நூற்றுக்கணக்கான மக்கள் முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்திற்கு வருகை தந்து தமது மரியாதைகளை அவருக்குச் செலுத்திச் செல்கின்றனர்' என காவற்துறை உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார்.

கிட்டத்தட்ட 45 நிமிடங்களுக்குப் பின்னர் சண்டாபரன என்னிடம் வந்தார். இன்னமும் அரை மணித்தியாலத்தில் ராஜபக்ச வந்து விடுவார் என என்னிடம் கூறினார்.

நான் முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்தின் நுழைவாயிலைக் கடந்து மிகச் சிறிய பாதுகாப்பு அறைக்கு அடுத்துக் காணப்பட்ட ஒரு இருக்கையில் அமருமாறு கூறப்பட்டேன். இங்கு மக்கள் தமது கைத்தொலை பேசிகளை கையளித்து விட்டு வரிசையில் அமைதியாகக் காத்திருந்தனர்.

காலை 9.15, இல்ல வளாகத்திற்குள் மிகப் பெரிய கறுப்பு நிற கார் ஒன்று நுழைந்ததை நான் கண்டேன். உடனே அங்கு கூடியிருந்த மக்கள் நீங்கள் நீண்ட ஆயுளைக் கொண்டிருப்பீர்கள் என வாழ்த்தினர். இறுதியாக ராஜபக்ச தனது இல்லத்திற்கு வந்தடைந்திருந்தார்.

சண்டபரான என்னைக் கூட்டிச் செல்வதற்காக வந்தார். அதற்கு முன்னர் நான் எனது கைப்பையை பாதுகாப்பு அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டியிருந்தது. நாங்கள் நீண்டு சென்ற மக்கள் வரிசையைக் கடந்து சென்று கொண்டிருந்தோம்.

'பாகிஸ்தானிய பெண்மணி ஒருவர் தங்களைச் சந்திக்க விரும்புவதாகவும் ஏனெனில் அவரது உள்ளத்திலும் பாகிஸ்தா னிய மக்களின் இதயங்களிலும் நீங்கள் வாழ்வதாக நான் ஏற்கனவே ராஜபக்சவிடம் கூறியுள்ளேன்' என சண்டபரான என்னிடம் தெரிவித்தார். 'ஆம். உண்மையில் அப்படித்தான்' என நான் பதிலளித்தேன்.

மக்கள் வரிசையில் காத்திருந்த போது அவர்களைக் கடந்து என்னை ஒரு அறைக்குள் கூட்டிச் சென்றார். அங்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பழுப்பு நிற தோலாலான கதிரையில் அமர்ந்திருந்தார். அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். நாங்கள் கைகுலுக்கினோம்.

'உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி' என நான் அவரிடம் கூறினேன். 'தங்களைச் சந்திப்பது போன்று எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதியைச் சந்திப்பதென்பதைக் கற்பனையில் கூட என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. நீங்கள் மிக வும் பிரபலமடைந்துள்ளீர்கள்' என நான் அவரிடம் கூறினேன்.

அவர் பெருமை பொங்க எனது கைகளை மேலும் இறுக்கமாகப் பற்றிப் பிடித்தார். தமிழர் கிளர்ச்சியை முறியடிப்பதற்கு பாகிஸ்தான் தமக்கு உதவியதாக நான் சந்தித்த இலங்கையர்கள் சிலர் என்னிடம் கூறியது தொடர்பாக ராஜபக்சவிடம் நான் வினவினேன்.

'அமெரிக்கா, ஐரோப்பா, மேற்குலகம் போன்றன எமது நண்பர்களல்ல. எமக்கு பாகிஸ்தான் உதவியுள்ளது. குறிப்பாக முசாரப் உதவியுள்ளார். எனது நாட்டில் இடம்பெற்ற கிளர்ச்சி போன்றே உங்களுடைய நாட்டிலும் கிளர்ச்சி இடம்பெறுகிறது. இதற்குப் பின்னால் இந்தியாவின் றோ அமைப்பு செயற்படுகிறது' என ராஜபக்ச குறிப்பிட்டார்.

பாகிஸ்தானும் சிறிலங்காவும் எவ்வாறு மேலும் நெருக்கமான உறவைக் கட்டியெழுப்ப முடியும் என நான் அவரிடம் வினவினேன்.

'நான் இரண்டு தடவைகள் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளேன். நான் தக்சிலவுக்குச் சென்று பௌத்த எச்சங்களைப் பார்த்துள்ளேன். இவை தொடர்பாக இங்குள்ள மக்களுக்கு எதுவும் தெரியாது' என ராஜபக்ச தெரிவித்தார்.

'கிழக்கில் வாழும் முஸ்லீம்களும் வடக்கில் உள்ள மக்களும் தற்போது நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தவறாக வழிநடாத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக இவர்கள் அனைத்துலக சக்திகளால் தவறாக வழிநடத்தப்பட்டனர்' என மகிந்த ராஜபக்ச விளக்கினார்.

பாகிஸ்தானிய மக்களுக்கு ஏதாவது செய்தியைக் கூறப்போகிறீர்களா என நான் ராஜபக்சவிடம் வினவியபோது, 'உங்களது நாட்டில் தற்போது இடம்பெறும் கிளர்ச்சி விரைவில் முடிவுறும். நாடு வளம்பெறும். நாங்கள் மேலும் நெருக்கமானவர்களாவோம்' என ராஜபக்ச குறிப்பிட்டார்.

ராஜபக்சவிடமிருந்து விடைபெறுவதற்கு முன்னர் என்னை அவர் சந்தித்த தற்காக நான் நன்றி கூறியதுடன் 'நீங்கள் தற்போதும் சோதிடத்தில் நம்பிக்கை கொண்டுள்ளீர்களா' என நான் ராஜபக்சவிடம் வினவினேன்.

அதற்கு அவர் 'தற்போது நான் சோதிடத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை' எனக் கூறிவிட்டு உரத்துச் சிரித்தார்.

-நித்யபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி ௯-ம் திகதி நடந்தது என்ன?

## முன்னாள் இராணுவத்தளபதி விளக்கம்



(கொழும்பு)

**முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோற்றுக்கொண்டிருப்பது தெரியவந்ததும் முப்படை தளபதிகளும் பொலிஸாரும் அலரி மாளிகைக்கு அவசர அவசரமாக அழைக்கப் பட்டனர் என்பதை ஏற்றுக்கொண்டுள்ள முன் னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க, எனினும் சதிப்புரட்சி முயற்சி குறித்து விவா திக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. தேர்தல் வாக்களிப்பு தினத்திற்கு முன்னர் எதிர்க்கட்சிகளிடம் இராணுவம் வாக்களிப்பை குழப்பும் என்ற அச்சம் காணப்பட்டது குறிப்பாக வடக்கு, கிழக்கில.

மேலும் அரசாங்கம் தோற்றாலும் அது அதிகாரத்தை விட்டுக்கொடுக்காது என்ற அச்சமும் காணப்பட்டது. தேர்தலை சுற்றி காணப்பட்ட இரு விடயங்கள் அவைதான். இந்த சமயத்தில் இவ்வாறான அச்சங்கள் தேவையற்றவை, இராணுவம் எந்த தருணத்திலும் ஜனநாயக அரசியலில் தலையிடாது என பதை நாங்கள் வலியுறுத்தி வந்தோம்.

எனினும் தேர்தல் வாக்களிப்பு முடிவடைந்தவுடன் இந்த அச்சம் அர்த்தமற்றது என்பதை அனைவரும் உணர்ந்தனர். 80 வீதமானவர்கள் வாக்களித்ததே இதற்கு காரணம். மேலும் இது மிகவும் அமைதியான தேர்தலாக காணப்பட்டது. நாடு முழுவதிலும் அவ்வாறே காணப்பட்டது. இதற்கான பாராட்டுகள் இராணுவத்திற்கே செல்லவேண்டும்.

ஒன்பதாம் திகதி அதிகாலை முன்னைய அரசாங்கம் தோற்றுக் கொண்டிருந்தவேளை பலர் இராணுவம் அதில் தலையிட்டு அதனை தடுத்து நிறுத்தும் என்றே கருதினர். இது நடைபெறும் என உண்மையில் எதிர்பார்த்த பலரிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்புகள் கூட வந்தன.

பின்னர் அதிகாலை 2 மணிக்கு முப்படைகளின் தளபதி, பொலிஸ்மா அதிபருடன் நாங்கள் அலரிமாளிகைக்கு அழைக்கப்பட்டோம். நாங்கள் அங்கு சென்றது நல்ல விடயமாக அமைந்தது. அங்கு பலர் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் காணப்பட்டனர். சீற்றத்தில், ஆவேசத்தில் காணப்பட்டனர். எனினும் நாங்கள் இவ்வாறான சூழ்நிலைகளில் முடிவெடுப்பதற்கு பழக்கப்பட்டவர்கள். எங்கள் ஐந்து உணர்வுகளும அன்று நல்லநிலையிலிருந்தன.

எங்களை அலரிமாளிகைக்கு வருமாறு ஜனாதிபதி அழைக்கவில்லை. முப்படைகளின் பிரித்தானியே அழைத்தார். மக்களின் ஆணையை ஏற்று பதவிவிலகுவதாக அறிக்கையொன்றை வெளியிடுமாறு நான் ஜனாதிபதியின் செயலாளருக்கு தெரிவித்தேன். அந்த குறுகிய நேரத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது நான் எதிர்க்கட்சி தலைவரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டேன். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அதன்படி அதிகாரத்தை கையளிப்பது தொடர்பான பேச்சுக்களுக்காக அவர் அலரிமாளிகைக்கு அழைக்கப்பட்டார்.

அதிகாரத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வது, சதிப்புரட்சி முயற்சிகள் போன்றவை குறித்து அன்றிரவு அங்கு விவாதிக்கப் படவில்லை. சிலர் உணர்ச்சி வசப்பட்டவர்களாக ஊரடங்கினை அறிவிக்குமாறு கோரினர். எனினும் நானும் பொலிஸ்மா அதிபரும் அதற்கு அவசியமில்லை என தெரிவித்தோம்.

புலனாய்வு பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் மூலமாக நான் ஒவ்வொரு நிமிடமும் நாட்டின் நிலவரம் குறித்து தகவல்களை பெற்று அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திக் கொண்டிருந்தேன். நாட்டில் முழுமையான அமைதி நிலவியது. அதனால் ஊரடங்கிற்கான அவசியமிருக்கவில்லை. நாட்டின் பாதுகாப்பை அடிப்படையாக வைத்து அவசரகால சட்டத்தை பிறப்பிக்க வேண்டிய தேவையில்லை என்பதை நான் தெளிவுபடுத்தினேன். அவர்கள அந்த முடிவை எடுக்க விரும்பினால் சட்ட ஆலோசனைகளை பெறுவது நல்லது என்றும் நான் தெரிவித்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சீனாவின் போட்சிட்டி திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாம்

(கொழும்பு)

இலங்கையில் பலத்த சர்ச்சைகளை தோற்றுவித்துள்ள சீனாவின் போட்சிட்டி திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ஹபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட திட்டத்திற்கு அனுமதி வழங்கும்போதும் நாட்டின் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. துறைமுக அதிகார சபைக்கு இவ்வாறான கூட்டு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க அதிகாரமில்லை என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை பெருமளவு நட்டத்தை சந்திக்கவேண்டியிருக்கும் போல தோன்றுகின்றது. இதன் காரணமாக முழு திட்டத்தையும் நாங்கள் மீள ஆய்விற்குட்படுத்தியுள்ளோம், அதனால் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டங்கள் மீறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அது குறித்து ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அமைச்சரவை குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மரண தண்டனை ஊடாக போதைப் பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிக்க வேண்டும்

### ஜோன் அமரதுங்க கோரிக்கை

மரண தண்டனை ஊடாகவே போதைப் பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிக்க வேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் கொள்கலன்களில் தருவித்து குற்றவாளிகளாகின்றனர். இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கின்றது.

மரண தண்டனை விதிக்கப்படுவோர் இரண்டு மூன்று ஆண்டுகளில் விடுதலையாகின்றனர்.

விதிக்கப்படும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் குற்றவாளிகளை கட்டுப்படுத்த முடியும்.

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டியது நாட்டுக்கு மிகவும் அவசியமானது என்றே கருதுகின்றேன் என ஜோன் அமரதுங்க கொழும்பு பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை,மரணதண்டனையை [illegible] ன்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பாராட்டிப் பழகுங்கள்!

நல்ல வார்த்தைகள், இங்கிதமான வார்த்தைகள், மங்களகரமான வார்த்தைகள், மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். மனிதர்கள் மட்டுமல்லாமல் அது மிருகங்களைக்கூட வசியப்படுத்துமாம். தாவரங்களைக்கூட வசியப்படுத்துமாம். அதனால் எந்நேரத்திலேயும் நல்ல வார்த்தைகளாகப் பேச வேண்டும் என்று சொல்லுவார்கள்.

தாவரங்களைக்கூட வசியப்படுத்தும் என்று சொல்லுகிறோமல்லவா? அதை வந்து ஒரு பெரியவர் நிரூபித்துக்காட்டினாராம். அவர் ஒரு தொட்டியை எடுத்துக்கொண்டார். அதில் வளமான மண்ணைப் போட்டார். இதில் பத்து விதைகளை அவர் ஊன்றி வைத்திருக்கிறார். அதேமாதிரி கொஞ்சம் தூரத்தில் இன்னொரு தொட்டி. அதே வளமான மண் தான். அதேமாதிரி பத்து விதைகலை அதிலேயும் ஊன்றி இருக்கின்றார். இப்போ என்ன நடக்கின்றது என்றால், இந்த பத்து விதைகள் ஊன்றிய முதல் தொட்டி இருக்கல்லவா? அதற்கு பக்கத்தில் வந்து தினமும் சொல்லுவாராம். நீங்கள் நல்ல விதைகள், அற்புதமான விதைகள், ரொம்ப சிறப்பான முறையில் முளைக்கப் போகின்றீர்கள், நல்லா பசுமையாக நீங்கள் வளர்வீர்களென்று சொல்லுவாராம்.

பின்னர் அடுத்த தொட்டி அருகே போய் நீங்கள் எங்கே முளைக்கப் போகின்றீர்கள், நீங்கள் எங்கே உருப்படப் போகின்றீர்கள், உங்களுக்கு அந்த ஆற்றலும் கிடையாது, நீங்கள் மக்கித்தான் போகப் போகின்றீர்கள் என்று சொல்லுவாராம்.

இப்படியே இந்த தொட்டிக் அருகில் நல்ல வளமான வார்த்தைகள். அந்த தொட்டிக் அருகில் ஏசுகின்ற வார்த்தைகள். இப்படியே காலம் போய்க்கொண்டே இருந்தது. போகப் போகப் என்ன ஆகியிருக்கு என்றால், கொஞ்ச நாள் கழித்து விதைகளெல்லாம் முளைக்கத் தொடங்குமல்லவா. அப்படி முளைக்கத் தொடங்குகின்ற காலத்தில் பார்த்தால் இந்த நல்ல வார்த்தைகளாக, பாராட்டுகின்ற வார்த்தைகளாக சொல்லிக்கொண்டிருந்தார் பாருங்கள். அந்த தொட்டியில் இருந்த பத்து விதைகளும் நல்லாக முளைத்திருந்ததாம்.

ஆனால் இங்கே இன்னொரு தொட்டியில் இதற்கு எதிர்மாறான விளைவு. அதிலேயிருந்த எல்லா விதைகளும் முளைக்கவில்லை. ஏதோ இரண்டு மூன்று விதைகள் கொஞ்சம் முளைத்து வந்திருக்கின்றது. ஆனாலும் அதெல்லாம் ரொம்ப சோகை பிடித்ததுமாதிரி, நோய் பிடித்தது மாதிரி இருந்திருக்கின்றது.

இதை மக்களுக்கு அந்தப் பெரியவர் காட்டினார். பார்த்தீர்களா? நல்ல வார்த்தைகள், பாராட்டுகின்ற வார்த்தைகள், உற்சாகமான வார்த்தைகள் சொல்லும் போது விதைகள்கூட பழுதுபடாமல் எல்லா விதைகளும் மகிழ்ச்சியோடு நல்லா முளைத்திருக்கின்றது. ஆனால் இந்த விதைகளைப் பாருங்கள். அவற்றை ஏசிக்கொண்டே இருந்ததனால் ஏற்பட்ட பாதிப்பு அந்த விதைகள் முளைக்கிறதிலேயே தெரிந்திருக்கின்றது பார்த்தீர்களா?

இதை வைத்துக்கொண்டு தான் மனித வாழ்க்கையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என நாம் தெரிந்துகொள்ள வேண்டும். யாரையும் ஏசக்கூடாது. யாருக்கும் சாபம் கொடுக்கக் கூடாது. எல்லோருக்கும் நல்லா பாராட்டுகின்ற வார்த்தைகளாக சொல்லிப் பழக வேண்டும். அப்படியென்று ஆலோசனை சொன்னாராம்.

இதை எங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடித்தோம் என்றால் எவ்வளவோ சாதனைகளை படைக்கலாம். ஆனால் சில பெற்றோர் இருக்கிறார்கள் பிள்ளைகளை நீ உருப்படமாட்டாய், நீ என்னவாக ஆகப் போகின்றாய், நீ ஒன்றுக்கும் லாயக்கில்லை. அப்படியென்று ஏசிக்கொண்டே இருப்பார்கள். பாடசாலைக்குப் போனால் சில ஆசிரியர்கள் இப்படித்தான் மக்குப் பயலே, உருப்படமாட்டாய், உன்னால் ஒன்றும் ஆகாது, போ அங்கே போய் உட்கார் என்று அந்தப் பையனை மட்டந்தட்டிக்கொண்டிருப்பார்கள். இது எப்படிப்பட்ட உளப்பூர்வமான விளைவுகளை ஏற்படுத்துமென்று அவர்கள் யோசிக்கிறதில்லை. பையன் உண்மையிலேயே சுமாராக இருந்தால்கூட நீ நல்லாக படிப்பாயப்பா, திறமைசாலி, நீ நல்லா மார்க் வாங்குவாய். ம்... நல்லா உற்சாகமாக இரு அப்படியென்று தட்டிக்கொடுத்து வளமான வார்த்தைகள் சொல்லிக்கொண்டே வந்தோமென்றால் அதுகூட அவன் மனதில் ஒரு வளமான சூழ்நிலையை உருவாக்கும். இதற்குப் பதிலாக சாபம் கொடுத்துக்கொண்டே வருவோமென்று வைத்துக்கொள்ளுங்கள், ஒன்றுக்கும் லாயக்கில்லை, உருப்படமாட்டாய், மூஞ்சியைப் பாரு அப்படியென்று திட்டிக்கொண்டு இருந்தோமென்றால் அவனுடைய எதிர்கால சிந்தனையை அதுவே மழுங்கடித்துவிடுமாம். அதனால்தான் வகுப்பு அறைகளிலேயோ அல்லது வீடுகளிலேயோ பிள்ளைகளைப் பார்த்து இந்த மாதிரி அமங்கலமான வார்த்தைகள், உற்சாகத்தைக் குறைக்கின்ற வார்த்தைகளை பிரயோகம் செய்யக் கூடாது என்று பெரியவர்கள் அழுத்தம் திருத்தமாக சொல்லியிருக்கின்றார்கள்.

அதனால்தான் நோயாளிகளிடம்கூட ஆறுதலான வார்த்தைகள் சொல்ல வேண்டுமாம். நல்ல சுகமாக இருங்கள். கவலைப்படாதீர்கள் என்று சொல்ல வேண்டும். இல்லையென்றால் வேறு மாதிரி ஆகிவிடுமாம்.

ஒரு நோயாளிக்கு ஆபரேசன் ஆகப்போகின்றது. அவர் "டாக்டரிடம் கேட்டாராம், டாக்டர் ஆபரேசன் முடிந்தவுடன் நான் பீஸ் கொடுத்தால் போதுமா என்று" அதற்கு டாக்டர் சொன்னாராம், "போதும். ஆனால் நான் பீஸ் எல்லாம் யாரிடமிருந்து வசூல் பண்ணிக்கவேண்டுமென்று அடையாளம் காட்டிவிட்டு போய் விடுங்கள் என்று" அந்த நோயாளிக்கு என்ன ஆகியிருக்கும் பாருங்கள்!

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்காய் போராடியதற்கு எனக்கு மோடி அரசு தந்தது சிறைவாசம்

நியூட்ரினோ திட்டத்தை எதிர்த்துத் தொடர்ந்த வழக்கில் வழக்கறிஞர், விடு தலைப்புலிகளை ஆதரித்துப் பேசிய வழக்கில் குற்றவாளி, நீதிமன்றத்தில் இருதுருவப் பாத்திரங்களையும் வகித்துவிட்டு, இரவே டெல்லி புறப்பட்டார் வைகோ. நில அபகரிப்புச் சட்டத்தை எதிர்த்து டெல்லியில் நடந்த போராட்டத்தில் கலந்துகொண்ட வைகோ, வட இந்தியத் தலைவர்களை வரிசைகட்டிப் பார்த்தார். "என்ன திடீர் பரபரப்பு?" எனக் கேட்டுப் போனால்... ஏகப்பட்ட விடயங்களை பகிர்கிறார் வைகோ.

"மேதா பட்கர் கடந்த மாதம் சென்னை வந்திருந்தபோது, நியூட்ரினோ திட்டத்தை எதிர்த்து ம.தி.மு.க நடத்தும் போராட்டங்களுக்கு அவரிடம் ஆதரவு கேட்டேன். 'நிச்சயம் ஆதரிக்கிறேன்' என்ற மேதா, டெல்லியில் நில அபகரிப்புச் சட்டத்தை எதிர்த்து 'மக்கள் இயக்கங்களின் தேசியக் கூட்டமைப்பு' நடத்தும் போராட்டத்தில் கலந்துகொள்ள அழைத்தார். அதனால், டெல்லி போராட்டத்தில் ம.தி.மு.க தொண்டர்களுடன் கலந்து கொண்டு தரையில் அமர்ந்தேன். 'தரையில் அமரச் செய்வதற்காகவா உங்களை இவ்வளவு தூரம் அழைத்தேன்?' என என்னை மேடைக்கு அழைத்தார் மேதா பட்கர்.

அதே நாளில் இதே நில அபகரிப்புச் சட்டத்தை எதிர்த்து, டெல்லி ஜந்தர் மந்தரில் ஒரு போராட்டத்தை நடத்திய அண்ணா ஹஜாரே, திடீரென மதியத்துக்கு மேல் புறப்பட்டு வந்து எங்கள் மேடையில் அமர்ந்தார். அவர் இருந்த மேடைக்கு நான் போகவில்லை. நான் இருந்த மேடைக்குத்தான் அவர் வந்து இணைந்துகொண்டார்.

**"டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலைச் சந்தித்துப் பேசினீர்களே... தமிழகத்தில் ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி அமைக்கும் எண்ணம் இருக்கிறதா?"**



அரவிந்த் கெஜ்ரிவாலுடன்...

## இலட்சியங்களுக்காய் போராடுவது தவறல்ல

"அப்படி ஒரு சிந்தனையே இல்லை. அரவிந்த் கெஜ்ரிவால் என்ற அந்த மனிதனின் எளிமை என்னை எப்போதும் கவர்ந்த விடயம். மேதா பட்கர் நடத்திய போராட் டத்துக்கு அவரும் வந்திருந்தார். ஆனால், 'அரசியல்வாதிகள் யாரும் மேடைக்கு வரக்கூடாது' என அண்ணா ஹஜாரே சொல்லியிருந்ததால், கெஜ்ரிவால் மேடைக்கு வரவில்லை. உடனடியாக நான் அண்ணா ஹஜாரேவிடம், 'அரவிந்த் கெஜ்ரிவால் கடந்த காலங்களில் உங்கள் நிழலில் வளர்ந்தவராக இருக்கலாம். ஆனால், இப்போது அவருக்கு டெல்லி மக்கள் தங்கள் மாநில முதலமைச்சராக மகுடம் சூட்டியுள்ளனர். அவரைத் தரையில் அமரவைப்பது சரி அல்ல...' என்றேன். புரிந்துகொண்ட அண்ணா ஹஜாரே, அதை ஆமோதிப்பதுபோல் தலை ஆட்டினார். 'அண்ணா ஹஜாரே சார்பில் டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவாலை மேடைக்கு அழைக்கிறேன்' என நான் ஒலிபெருக்கியில் அறிவித்தேன். அதன் பிறகே கெஜ்ரிவால் மேடைக்கு வந்தார். அப்போது அவர் என்னை வீட்டில் வந்து சந்திக்கச் சொன்னார். அதனால் கெஜ்ரிவாலை அவருடைய வீட்டில் சந்தித்தேன். 'ஈழத்தில் இனப்படுகொலை... இதயத்தில் ரத்தம்' என்ற என் புத்தகத்தையும் குறுந்தகடையும் கொடுத்தேன். அரவிந்த் கெஜ்ரிவால் தேர்தல் சமயத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உள்ள சவால்களை எதிர்கொள்ள உற்சாகப்படுத்தவே, அவரைச் சந்தித்தேன். மற்றபடி ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடம் இல்லை. இதை அழுத்தம் திருத்தமா கச் சொல்கிறேன். ஏனென்றால், தமிழ்நாட் டில் சில பயலுகள் தான்தான் கெஜ்ரிவால் என அலைந்து கொண்டிருக்கிறார்கள்."

**"முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்திருக்கிறீர்களே..?"**

"மன்மோகன் சிங் இந்தியப் பிரதமராகக் கொண்டுவந்த திட்டங்கள் பலவற்றை நான் கடுமையாக விமர்சித்துள்ளேன். ஆனால், மன்மோகன் சிங் என்ற மனிதர் மீது எனக்கு அளவு கடந்த மரியாதை உண்டு. நான் பொருளாதாரம் படித்தவன். அப்போது என்னுடைய பேராசிரியர்கள், மன்மோகன் சிங் பற்றி மிக உயர்வாகச் சொல்வார்கள். 'அவர் ரிசர்வ் வங்கி கவர்னராக இருந்தபோது, பேருந்தில்தான் பயணம் செய்வார். அவர் கல்லூரிப் பேராசிரியராக இருந்தபோது, மாணவர்களை சைக்கிள் கரியரில் வைத்து அழைத்துச் செல்வார்' என்பார்கள். அப் போது முதலே அவர் எனக்கு ஆதர்சம். அதனால் அவரைச் சந்தித்தேன். 'இலங்கையில் இப்போது என்ன நடக்கிறது?' என என்னிடம் கேட்டார். 'கொடுமைகள் இன்னும் அதிகரித்துள்ளன' என்றேன்!"

**"லாலுபிரசாத் யாதவுடனான சந்திப்பு?"**

"லாலு பிரசாத் யாதவ் வசிக் கும் 'சகுந்தலா பண்ணை' வீட்டுக்குப் போனேன். அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளு க்கு, 'இவர்தான் நமக்கு வருடா வருடம் பட்டாசுகள் அனுப்பி வைக்கும் தலைவர்' என அறிமுகம் செய்து வைத்தார்.

**"நரேந்திர மோடி பிரதமராக வரவேண்டும் என விரும்பி, அந்தக் கூட்டணியில் இடம்பெற்று, அதற்காகப் பிரசாரம் செய்தீர்கள். பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சி எப்படி இருக்கிறது?"**

"கார்ப்பரேட் கம்பெனிகளால், கார்ப்பரேட் கம்பெனிக்ளுக்காக நடக்கும் கார்ப்பரேட் கம்பெனி அரசாங்கம்தான் இந்த நரேந்திர மோடி அரசு. இந்த அரசாங்கம் கொண்டு வந்துள்ள நில அபகரிப்புச் சட்டத்தைப் போன்ற ஒரு கொடுமையான சட்டத்தை, நாடு பிடிக்க வந்த பிரிட்டிஷ்காரன்கூட கொண்டுவந்தது இல்லை. இதுபற்றி இன்னும் மக்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

மக்களுக்குத் தெரியவரும்போது, அவர்கள் எரிமலையாக வெடிப்பார்கள். நிலத்தை அபகரிக்கும் இந்தச் சட்டத்தின் மூலம், ஒரு வழிப்பறிக்காரனின் வேலையை மோடி அரசாங்கம் செய்துள்ளது. நரேந்திர மோடி அரசைப்போல மிக மோசமான அரசை இந்தியா இதுவரை சந்தித்தது இல்லை. அதை மக்கள் புரிந்து கொண்டு விட்டனர். அதனால்தான், டெல்லி சட்டமன்றத் தேர்தலில், அந்த மக்கள் விளக்குமாற்றால் கூட்டிப்பெருக்கி பாரதிய ஜனதாவை வரலாற்றுக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டனர்."

**"ஈழப் பிரச்சினையிலேனும் மோடி அரசாங்கத்தின் நிலைப்பாடு மாறியிருக்கிறதா?"**

"கொஞ்சம் மாறி இருக்கிறது. முன்பைவிட கொஞ்சம் கூடுதலாகத் துரோகம் செய்கிறார்கள். அதுதான் அந்த மாற்றம்! புதிதாக வந்த சிறிசேன அரசோடு சேர்ந்துகொண்டு இந்த மோடி அரசாங்கம் செய்யும் பச்சைத் துரோகத்துக்கு உதாரணம்தான், இலங்கையில் நடந்த இனப்படுகொலை பற்றி, ஐ.நா சமர்ப்பிக்கும் அறிக்கையை ஆறு மாதங்கள் ஒத்திப்போட்ட விவகாரம்."

**"மோடியை ஆதரித்ததற்காக இப் போது வருத்தப்படுகிறீர்களா?"**

"நான் ஏன் வருத்தப்பட வேண்டும்? முஸ்லீம்கள் எதிர்ப்பதற்கு முன்பே, கம்யூனிஸ்ட்கள் எதிர்ப்பதற்கு முன்பே மோடியை நான் எதிர்த்தேன். நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்கு ராஜபக்ஷ வருவதை எதிர்த்து சாஞ்சிக்குச் சென்று போராடினேன். அப்போது என்னைக் கைதுசெய்து நாடாளுமன்றச் சிறைச்சாலையில், பகத்சிங் அடைக்கப்பட்டு இருந்த அறையில் அடைத் தனர். எந்த மோடிக்காக நான் பிரசாரம் செய்தேனோ, அவர் வெற்றிபெற்று நாடாளு மன்றத்தில் பதவியேற்றுக் கொண்டிருந்த போது, அதே நாடாளுமன்றத்தின் சிறைச்சாலை யில் நான் அடைக்கப்பட்டிருந்தேன். அதனால, இதில் ஒன்றும் எனக்கு வருத்தம் இல்லை. நான் என் கடமையில் சரியாக இருக்கிறேன."

**"தேர்தலுக்குத் தேர்தல் உங்கள் வாக்கு வங்கி குறைந்துகொண்டே வருகிறதே?"**

"எது வாக்கு வங்கி? தி.மு.க. - அதி.மு.க இரண்டு கட்சிகளுக்கும் வாக்கு வங்கி இருக கிறது என்கிறார்கள். ஆனால், அவர்கள் காசு கொடுத்துத்தான் வாக்குகள் வாங்கி ஜெயிக்கிறார்கள். அதுபற்றி சொல்வதற்கு ஒன்றும் இல்லை. ஆனால், இத்தனை தோல்விகளுக்குப் பிறகும், எங்கள் கட்சி உயிர்ப்புடன் இருக்கிறது. முன்பைவிட வலுவாக இருக்கிறோம். ஜெயிக்காமல் அதிகாரத்துக்கு வராமல் இருந்தாலும், இன்னும் கட்சியின் தணல் கொஞ்சம்கூட அணையாமல் இருக்கிறது. மக்கள் பார்வை எங்கள் பக்கம் திரும பியுள்ளது. விவசாயிகள் பிரச்சினை, நியூட்ரினோ எதிர்ப்பு, பூரண மதுவிலக்கு, மாரத்தான் போட்டி, அணு உலை எதிர்ப்பு... என அனைத்து விவகாரங்களிலும் மக்கள் எங்கள் பக்கம்தான் உள்ளனர். தி.மு.கவின் பக்கமோ அ.தி.மு.கவின் பக்கமோ இல்லை."

**"முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின ஆட்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்?"**

"ஜெயலலிதா முதலமைச்சர் நாற்காலியில்தான் இல்லை. ஆனால், அவருடைய ஆட்சிதான் நடக்கிறது. அரசாங்கம் அவருடைய பெயரில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. பன்னீர்செல்வம் அறவே செயற்படவில்லை. தமிழக அரசைப் பொறுத்தவரை வன்க் கல்லூரி மாணவர் போராட்டத்தை அணுகிய விவகாரம் மனிதாபிமானமற்ற செயல். மீத்தேன் திட்டமும் நியூட்ரினோவும் கூடவே கூடாது என்ற முடிவை இந்த அரசாங்கம் எடுக்க வேண்டும்."

**"அடுத்த தேர்தலில் தமிழகத்தில் கூட்டணி யாரோடு?"**

"தி.மு.க - அ.திமு.க இரண்டு கட்சிகளுமே எங்களை அழிக்கப் பார்த்தவை என்பது கடந்தகால நிகழ்வுகளில் தெளிவாகப் புரிந்து விட்டது. நாங்கள் சட்டமன்றத்துக்குள்ளேயே நுழையக்கூடாது என நினைப்பவர்களுடன் எப்படி இனி கூட்டணி வைக்க முடியும்?"

மன்மோகன் சிங்குடன்...



**"50 வருட அரசியல் வாழ்வில் நீங்கள் பெற்றது என்ன... இழந்தது என்ன?"**

"இலட்சியங்களுக்காகவும் மக்கள் நலனுக்காகவும் போராடுவதில் மனதில் ஒரு சுகம் இருக்கிறது. இதில் இழப்பதற்கு எதுவும் இல்லை!"

**-ஆனந்த விகடன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கும் எனது குடும்பத்திற்கும் பாதுகாப்பு தேவைப்படுகின்றது

## ஜயந்த கெட்டகொட கோரிக்கை

தமக்கும் தமது குடும்பத்திற்கும் பாதுகாப்பு தேவைப்படுவதாக ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

தமக்கு உரிய பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றில், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளார்.

வரப்பிரசாத கேள்வி ஒன்றின் மூலம் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் சுயாதீனமான முறையில் கடமையாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனக்கும் எனது குடும்ப உறுப்பினர்களுக்கும் கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

சுதந்திரமான மனநிலையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனக்கு எதிராக அவதூறு ஏற்படும் வகையிலான விளம்பரங்கள், சுவரொட்டிகள் உள்ளிட்ட பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனக்கும், எனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் கடுமையான அவமானம் ஏற்படும் வகையல் பிரசாரம் மேற்கொள்ளப்படு கின்றது. சில தரப்பினர் இந்த நடவடிக் கைகளை திட்டமிட்ட வகையில் மேற்கொண்டு வருகின்றனர் என ஜயந்த கெட்டகொட தெரிவித்து ள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி நாடாளுமன்ற உறுப்பினராக கடமையாற்றி வந்த போது அப்போதைய அரசாங்கம் அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து தண்டித்திருந்தது. தண்டனை விதிக்கப்பட்ட கார ணமாக சரத் பொன்சேகா தனது நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்தார்.

அதன் பின்னர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஜயந்த கெட்டகொடவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கியதனைத் தொடர்ந்து நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை மீளப் பெற்றுக் கொள்ளும் முனைப்புக்களில் சரத் பொன்சேகா ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தோல்வியடைந்தமைக்கு மகிந்தவே முழுக்காரணம்

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தமைக்கு அவரே காரணம் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அவராலேயே தோற்றார்.

அவருக்கு தேசிய கொள்கையொன்று இருக்கவில்லை. மகிந்த தேசப்பற்றுடன் செயற்படவும் இல்லை.

அவரிடம் டபிள் கேம் தான் இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கினார். சில வானொலிகள், தொலைக்காட்சிகள் மற்றும் பத்திரிகைகள் மகிந்தவின் பணத்தினால் உருவானவை.

இதனை அச்சமின்றி தைரியமாக நான் கூறுவேன். இந்த ஊடக நிறுவனங்கள் நாட்டுக்கள் இனவாதத்தை தூண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். சிங்கள பத்திரிகையொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 130 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 100 |
| தக்காளி | 30 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 50 | 50 | 50 |
| கரட் | 200 | 120 | 150 |
| பூசணி | 100 | 80 | 80 |
| புடோல் | 40 | 50 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | — | 50 | 80 |
| பயற்றங்காய் | 50 | 60 | 120 |
| லீக்ஸ் | 200 | 150 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 20 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 130 | 150 | 100 |
| வெங்காயப்பூ | 80 | 160 | 160 |

# ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு தீர்வுகாண தொழில்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதியம் சம்பந்தமான அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கும் பொருட்டு தொழில் திணை க்களத்தினால் நடமாடும் சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என வட மாகாண பிரதித் தொழில் திணைக்கள ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்நடமாடும் சேவை எதிர்வரும் 9 ஆம் திகதியன்று பண்ணையில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தில் நடைபெறும் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைமத்தியவங்கியும்தொழில் திணைக்களமும் இணைந்து இந்நடமாடும் சேவையினை நடத்தவுள்ளன.

இந்நடமாடும் சேவையில் ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்கு நிலுவைக் கூற்றினைப் பெறுதல், பெயர், தேசிய அடையாள அட்டைத் திருத்தங்கள், ஊழியர் சேமலாப நிதியகணக்குகளைஒருங்கிணைத்தல், கணக் குகளை திருத்துதல், உறுப்பினரின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுதல் போன்றவை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் இலங்கை மத் திய வங்கியின் மேலதிக அதிகாரி எம்.எஸ்.கே. தர்மவர்தன தலைமையில் 15 உத்தியோகத் தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை அன்றைய தினம் 9 மணி யில் இருந்து நண்பகல் 12 மணிவரை யாழ். பொதுநூலகத்தில் தொழில் தருநர்களுக்கான கருத்தரங்கொன்றும் நடைபெறவுள்ளது என வும் அவர் தெரிவித்தார். (இ-4)





சாகி சாகித்தியா




மோகன் ராஜ்




பவானி சங்கர்




ரகு ரகுராம்




தனு தனுசன்




மாது மாதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிவிபத்தில் 30 பேர் மரணம்

(டன்ட்ஸ்க்)

**கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கத்தில் உள்ள டன்ட்ஸ்க் நகரில் ஸாசியாட்கோ என்ற நிலக்கரி சுரங்கத்தில் நேற்று முன்தினம் காலை நிலக்கரி வெட்டி எடுக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அப்போது திடீரென விபத்து ஏற்பட்டது. இதில் சிக்கி 30க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 14 பேர் படுகாயம் அடைந்தனர்.**

தகவல் அறிந்ததும் மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். ஆனால் வெடிபொருளில் இருந்து வெளியான விஷவாயுவால் மீட்பு பணியில் கால தாமதமானது. விஷவாயுவை வெளியேற்றிய பின்னர் மீட்புப்பணி தொடர்ந்து நடைபெற்றது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், '70இக்கும் மேற்பட்டவர்கள் சுரங்கத்திற்குள் சிக்கி உள்ளனர். இதில் பலர் உயிரிழந்து இருக்கலாம் என்றும், சிலர் காயம் அடைந்து இருப்பதாகவும் கூறப்படுகிறது' என்று தெரிவித்தார். வெடிவிபத்துக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை.

இதே சுரங்கத்தில் கடந்த 2007 ஆம் ஆண்டு நடந்த வெடிவிபத்தில் 106 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுப்பதில் ஆண்கள் ஈடுபட வேண்டும்

## ஐ.நா.ஆலோசனை

பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதில் ஆண்கள் ஈடுபட வேண்டும் என ஐ. நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்ததாக அவரது செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்தார்.

இருப்பினும், பலாத்கார குற்றவாளியின் தொலைக்காட்சிப் பேட்டி குறித்து கருத்து கூற அவர் மறுத்து விட்டார்.

டில்லி மருத்துவக் கல்லூரி மாணவியை பாலியல் பலாத்காரத்துக்குள்ளாக்கிய குற்றவாளி முகேஷ் சிங் அளித்த பேட்டியில்,

"நிர்பயா"-வுக்கு எதிரான கருத்து விவகாரம் குறித்து ஐ. நா. பொது செயலாளர் பான் கீ மூன் செய்தித் தொடர்பாளர் ஸ்டீஃபன் டுஜாரிக்கிடம் பத்திரி கையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அப்போது அவர்,"குற்றவாளி தெரிவித்துள்ள கருத்துக்கள் விளக்க முடியாத கருத்தெனவே பதில் அளிக்க முடியாது. பெண்கள் மீதான வன்முறையை எதிர்க்க வேண் டியது கட்டாயம். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க வேண்டும் என்பதிலும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதில் ஆண்களும் ஈடுபட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துவதிலும் பான் கீ மூன் தெளிவான நிலைப்பாட்டைக் கொண டுள்ளார்" என்றார்.

"இந்தியாவின் மகள்" ஆவணப் படத்துக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது குறித்து எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அவர், "பத்திரிகை சுதந்திரத்துக்கு ஐ.நா. என்றுமே ஆதரவானது. ஆனால் சில நாடுகளில் வழக்கு விசாரணைகளின் போது, ஊடகங்கள் ஏற்படுத்தும் பார்வை சில மாற்றங்களை ஏற்படுத்திவிடுகிறது. இதனால் அதற்குள் நாம் செல்ல வேண்டாம்.

குற்றவாளியின் பேச்சு குறித்து முழு விவரம் எங்களுக்கு தெரியவில்லை. எனவே அது குறித்து பதிலளிக்க ஒன்றுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# மூன்று நகரங்கள் மீட்பு

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேனின் சொந்த ஊர் திக்ரீத். ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றியுள்ள ஐ.எஸ் ஐ.எஸ. தீவிரவாதிகள் கடந்த ஜூன் மாதம் திக்ரீத் நகரை கைப்பற்றினார்கள்.

இதுபோன்று ஈராக்கில் பல இடங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. அவற்றை மீட்பதற்காக ஈராக் இராணுவம், குர்திஸ் படையினர் மற்றும் சியா பிரிவு படையினர் போரிட்டு வருகிறார்கள். அவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து பல பகுதிகளை மீட்டு வருகின்றனர்.

தற்போது திக்ரீத் நகரை மீட்பதற்காக 30 ஆயிரம் வீரர்களை கொண்ட படை அங்கு சென்றுள்ளது. அவர்கள் திக்ரீத் நகரை 3 பக்கமாக சூழ்ந்துள்ளனர். திக்ரீத்தின் புறநகரான அல்பெய்ப், அல்தபூர், மசராத்அல் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர். திக்ரீத் நகரையும் கிர்குக் நகரையும் இணைக்கும வீதியையும் கைப்பற்றிவிட்டனர்.

இந்த வீதி வழியாகத்தான் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு தேவையான பொருட்கள் வெளியிடங்களில் இருந்து வந்து கொண்டிருந்தன. இதை கைப்பற்றி விட்டதால் ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு வர வேண்டிய ஆயுதங்கள் மற்றும் பொருட்கள் தடைப்பட்டுள்ளன. தொடர்ந்து அந்த பகுதியில் கடுமையான சண்டை நடந்து வருகிறது. வீதி முழுவதும் ஏராளமான கண்ணிவெடிகளை ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் புதைத்து வைத்துள்ளனர்.

400இக்கும் மேற்பட்ட மிதிவெடிகளை அகற்றிவிட்டு இராணுவத்தினர் முன்னேறி வருகிறார்கள். இன்னும் ஓரிரு வாரங்களில் திக்ரீத் நகரை முழுமையாக மீட்டு விடுவோம் என்று ஈராக் இராணுவ தளபதி ஒருவர் தெரிவித்தார்.(இ-5)

# பனி மூட்டத்தால் தடுமாறிய விமானம் 238 பேர் அதிர்ஷ்டவசமாக தப்பினர்




இஸ்தான்புல் நகரிலிருந்து வந்த துருக்கி விமானம், காத்மண்டு விமான நிலையத்தில் தரையிறங்கிய போது, அதிக பனி மூட்டம் காரணமாக, ஓடுபாதையிலிருந்து விலகி விபத்துக்குள்ளானது. அதிர்ஷ்டவசமாக, அதிலிருந்த, 227 பயணிகள் மற்றும் 11 சிப்பந்திகள் அனைவரும், அவசர கதவின் வழியாக குதித்து பத்திரமாக உயிர் தப்பினர். மோசமான வானிலையால், விமானிக்கு ஓடுபாதை சரியாக தெரியாததே விபத்திற்கு காரணம் என, முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. எனினும், இதுகுறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என, திரிபுவன் விமான நிலைய செய்தி தொடர்பாளர் பூர்ண சுதல் தெரிவித்தார். (இ-5)

# அமெரிக்கத் தூதுவர் மீது கொலை வெறித்தாக்குதல்



தென் கொரியாவிற்கான அமெரிக்க தூதுவர் மார்க் லிப்பெர்ட் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சியோல் நகரில் தென் கொரியாவிற்கான அமெரிக்க தூதுவர் மார்க் லிப்பெர்ட்(வயது 42) நேற்று முன்தினம் காலை அதிகாரிகளை சந்தித்து பேசினார். அப்போது கொரிய போராளி ஒருவர் அமெரிக்க தூதரை தான் வைத்திருந்த கத்தியை கொண்டு கடுமையாக தாக்கினார்.

லிப்பெர்ட் முகம் மற்றும் இடது கையில் அந்த நபர் கத்தியை கொண்டு வெட்டினார். உடனடியாக பாதுகாப்பு பணியில் இருந்த அதிகாரிகள் போராளியை மடக்கி, பிடித்து கைது செய்தனர்.

அமெரிக்க தூதரை தாக்குவதற்கு முன்னதாக போராளி தென் கொரியா மற்றும் வடகொரியா மீண்டும் இணைக்கப்பட வேண்டும் என்று கத்தியதாகவும் கூறப்படுகிறது.

காயம் அடைந்த அமெரிக்க தூதர் மார்க் லிப்பெர்ட் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவருடைய உயிருக்கு எந்தஒரு ஆபத்தும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவும், தென்கொரியாவும் இணைந்து கூட்டுப் போர் பயிறசியில் ஈடுபடுவதற்கும் போராளி எதிர்ப்பு தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் போராளி வட கொரியாவின் முகவர் என்பதற்கு எந்தஒரு தடயமும் இல்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

காயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மார்க் லிப்பெர்ட்டிடம், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் பேசியுள்ளார். அவரது உடல்நிலையை கேட்டறிந்த அவர், உடனடியாக குணம் அடைய வாழ்த்து தெரிவித்தார். இந்த தாக்குதலுக்கு அமெரிக்க பாதுகாப்புத்துறை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அயல் நாடுகளான தென் கொரியாவுக்கும், வடகொரியாவுக்கும்பல ஆண்டு காலமாக பகைமை இருந்து வருகிறது. அணு ஆயுத தயாரிப்பில் வடகொரியா ஈடுபட்டு வருவதாக கூறப்படுவதால் தென் கொரியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்து வருகிறது. இதனால் தென் கொரியாவுக்கு இராணுவ உதவிகளை அமெரிக்கா அளித்து வருகிறது. மேலும் அமெரிக்காவும், தென்கொரியாவும் அவ்வப்போது இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டும் வருகின்றன. இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# பிரான்ஸ் அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடு மீட்பு




பிரான்சின் தலைநகர் பாரீஸில் உள்ள மோனோபிரிக்ஸ் என்ற பல்பொருள் அங்காடியில், கட்டடத்தின் திருத்த பணிகள் நடைபெற்ற போது 200க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து பல்பொருள் அங்காடியின் மேலாளர், தேசிய அகழ்வாராய்ச்சி நிறுவனத்தின் தடுப்பு பிரிவினருக்கு (INR AP) தகவல் தெரிவித்துள்ளார். தற்போது இந்த எலும்புக் கூடுகள் பற்றி அகழ்வாராய்ச்சி நிறுவனம் ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறது.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது, இந்த பல்பொருள் அங்காடி இருக்கும் இடம், 11ஆம் நூற்றாண்டில் வைத்தியசாலையில் இறந்தவர்களின் உடல்களை புதைக்கும் இடமாக இருந்தது என்றும், நோயின் தாக்கம் அல்லது பசிக்கொடுமையினால் இவர்கள் இறந்திருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இடத்தை மேலும் தோண்ட ஏராளமான எலும்புக்கூடுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தனர். மேலும் இந்த எலும்புக் கூடுகளைக் கொண்டு ஆராய்ச்சிகள மேற்கொள்ள உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.வைத்தியசாலையின் கழிவுநீர் தேங்கி துர்நாற்றம் வீசுகின்றது



## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் கழிவு நீர் வெளியேற்றத்திற்கென அமைக்கப்பட்டுள்ள குழாயில் இருந்து வெளியேறும் கழிவுநீர் அவ்விடத்தில் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன் அப்பகுதி முழுவதும் சுகாதார சீர்கேடாக இருப்பதாக சிகிச்சை பெறுவதற்கு வரும்நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையில்நான்காம் விடுத்திக்குள் செல்கின்றபாதைக்கும் நோயாளர்கள் ஓய்வெடுக்கின்ற இடத்திற்கும் இடையிலுள்ளசுவரில் நீண் நாட்களாகபுறாக்களின் எச்சம், வெற்றிலை எச்சில்கள் என்பன காணப்படுகின்றன.

அத்துடன் வைத்தியசாலையில் கழிவு நீர் வெளியேற்றப்படும் குழாயும் சுவருக்கு வெளியில் விடப்பட்டு சுவருக்கு அருகிலேயே கழிவு நீர் தேங்கி நின்று ஈக்கள் மொய்ப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சுகாதார சுத்திகரிப்பு பணியாளர்கள் இருந்தும் இவ்விடங்களில் சுகாதார சீர்கேடாக இருப்பது ஏன் என நோயாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.


இவ் வைத்தியசாலைக்கு நாளாந்தம் வெளி நோயாளர்கள் வருகை தருவதுடன் விடுதிகளிலும் தங்கிநின்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் வைத்தியசாலையின் உணவகம், வைத்தியசாலையின் நாளாந்த சமயலறை இவைகள் அனைத்தும் இவ் வளாகத்திற்குள்ளேயே அமைக்கப்பட்டுள்ளன.


வைத்தியசாலையிலிருந்து பெருக்கெடுக்கும் ஈக்கள் உணவகம், சமயலறை ஆகியவற்றில் காணப்படும் உணவுகளில் அமர்வதால் தொற்று நோய்கள் ஏற்படும்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற சுகாதார மேற்பார்வையாளர், வைத்திய அதிகாரி ஆகியோர் இவ் வைத்தியசாலை வளாகத்தையும் நான்காம் விடுத்திக்கு அருகிலுள்ள சுவரையும் கழிவு நீர் செல்லுகின்ற குழாயையும் நேரில் பார்வையிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நோயாளர்களாலும் பொதுமக்களாலும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (அ-2-27)







மகளிர், குழந்தைகள் மருத்துவத் தொகுதி கட்டடத் திறப்பு விழா புதுக்குடியிருப்பில் நேற்றுக் காலை 10 மணியளவில் நடைபெற்ற போது...

# முத்தையன்கட்டுகுளம் புனரமைக்கப்படவுள்ளது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான முத்தையன்கட்டுக்குளம், உலக வங்கியின் 586 மில்லியன் ரூபாய் நிதியில் புனரமைக்கப் படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சிறிஸ்கந்த ராஜா தெரிவித்துள்ளார்.

முத்தையன்கட்டுக்குளத்தின் அணைக்கட்டு, வாய்க்கால் என்பவற்றை புனரமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதால் அதனை விரைந்து புனரமைத்துத் தருமாறு, குளத்தின் கீழ் விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகள் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் பிரதிப் பணிப்பாளர் தெரிவிக்கையில்,

அக்குளத்தைப் புனரமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், கைவசம் இருக்கும் நிதி மூலம் குளத்தின் அணைக்கட்டை புனரமை த்து வான்கதவுகள் இரண்டையும் புதிதாக நிர்மாணிக்கவுள்ளதாகவும் ஏற்கனவே இருக்கும் இரண்டு வான்கதவுகள் புனரமைபபுச் செய்து வான்பகுதியின் கலிங்கை இரண்டடி உயர்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

வாய்க்காலைப் புனரமைப்பதற்கு மேலதிக நிதி தேவைப்படுகின்ற நிலையில், அந்த நிதி கிடைத்ததும் வாய்க்கால்களும் புனரமைக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ-2)

# அம்பலப்பெருமாள் குளத்திற்கு மின்னிணைப்பு பணிகள் ஆரம்பம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, துணுக்காய் அம்பலப்பெருமாள் குள கிராமத்துக்கான மின்னிணைப்பு வேலைகள் இடம்பெற்று வருவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் சிவபாலன் குணபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

துணுக்காயிலிருந்து தென்னியங்குள சந்தி வரையான மின்னிணைப்பு பூர்த்தியாகி விட்டது.

தற்போது கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் ஆகிய கிராமங்களுக்கான மின்னிணைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, துணுக்காயிலிருந்து அக்கராயன் செல்லும் வீதியும் துணுக்காயிலிருந்து ஐயங்கன்குளம் வரையான வீதியையும் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

# ஒட்டுசுட்டானில் கணவனை இழந்த நிலையில் 887 குடும்பங்கள்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 27 கிராம சேவையாளர் பிரிவுகளில் வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகவும் ஏனைய காரணிகளாலும் குடும்பத் தலைவர்களை இழந்த நிலையில் 887 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களும் பொருளாதார பிரச்சினை காரணமாகவும் ஏனைய காரணங்களாலும் ஏற்பட்ட குடும்பப் பிணக்கு காரணமாக 138 பெண்கள் கணவனைப்பிரிந்து வாழ்ந்து வருகின்றதாகவும் இவர்களுக்குரிய வாழ்வாதார தொழில் முயற்சிகள் இன்றி குடும்ப சுமையைச் சுமக்க முடியாது அவல வாழ்க்கை வாழ்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது நூற்றுக்கணக்கான பெண்கள் தமது வாழ்க்கைத் துணையை இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் 20 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட 40 பெண் தலைமைத்துவ குடும்பங்களும் 30 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட 485 பெண் தலைமைத்துவ குடும்பங்களும் 60 வயதிற்கு மேற்பட்ட 361பெண் தலைமைத்துவ குடும்பங்களுமாக மொத்தம் 887 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்களோடு போரின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகள் காரணமாகவும் மற்றும் ஏனைய குடும்ப பிரச்சினை காரணமாகவும் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் 138 பெண் தலைமைத்துவ குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன.

இவர்களோடு யுத்தம் காரணமாகவும் ஏனைய வழிகளிலும் மனைவியை இழந்த நிலையில் 128 இற்கு மேற்பட்ட தபுதாரர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஒட்டுமொத்தமாக இவர்கள் அனைவரும் பொருளாதார சுமைகளுடன் தமது குழந்தைகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே புலம்பெயர் உறவுகளும் மற்றும் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களும் இவ் விடயத்தை கவனத்தில் கொண்டு தமக்கான வாழ்வாதாரத்திற்குரிய தொழில்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள மேற்படி குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் பிரச்சினைக்கு மோடி தீர்வுகாண வேண்டும்!

## தி.மு.க செயற்குழுவில் தீர்மானம்

(சென்னை)

**பிரதமர் மோடி விரைவில் இலங்கை செல்லவுள்ளார். அவர் இலங்கைக்கு செல்லும் போது ஈழத்தமிழர்களின் முக்கியமான பிரச்சினைகளை இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் விவாதித்து முடிபுகள் காண வேண்டுமென தி.மு.க.வின் செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

தி.மு.க. செயற்குழு கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

2011ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அனைத்துத் துறைகளிலும் தமிழ் நாடு தவித்துத் தள்ளாடும் நிலை உள்ளது.

இந்த நிலைக்குத் தமிழகத்தை உள்ளாக்கிய அ.தி.மு.க. அரசுக்குத் தனது கடுமையான கண்டனத்தை இந்தச் செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.

2014ஆம் ஆண்டு மத்தியில் பா.ஜ.க. அரசு அமைந்த பிறகு, நாட்டின் வளர்ச்சிக்கும், ஏழை எளிய நடுத்தர மக்களின் மேம்பாட்டுக்கும் பல்வேறு புதிய திட்டங்கள் வரிசையாக நடைமுறைக்கு வரும் என்று நாம் அனைவரும் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் மற்றும் அவர்களுக்கு அணுக்கமானவர்கள் பேசுவது இந்திய ஒருமைப்பாட்டிலும், சமத்துவக் கொள்கையிலும் நம்பிக்கையுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியவைகளாக இல்லை.

இந்த நாட்டின் பிரதமர் என்ற முறையில் மத ரீதியில் அபத்தமான கருத்துகள் தெரிவிக்கப்படுவதையும், பாகுபாடு காட்டுவதையும் அனுமதிக்க முடியாது. வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமேயன்றி, ஒற்றுமையின்மையை ஏற்படுத்தி விடக்கூடாது" என்று பாராளுமன்றத்தில் பேசிய மோடியின் பேச்சு தவிர அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் பேசியவை அனைத்தும் கண்டிக்கத்தக்கவை ஏற்கத்தக்கவையல்ல. இலங்கையில் தேர்தல் நடைபெற்று ஜனாதிபதி மாறியும் இன்னமும் தமிழக மீனவர்களின் துயரங்கள் நீங்கிய பாடில்லை.

இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக இரு நாடுகளின் மீனவர் பிரதிநிதிகளை அழைத்து சமரசப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனவும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு ஏற்படும் வரையிலாவது தமிழ் மீனவர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டுமெனவும் இச்செயற்குழு மத்திய, மாநில அரசுகளை வற்புறுத்துகிறது.

ஈழத் தமிழர்களின் நல்வாழ்வுக்கும், நீண்ட நெடுங்காலமாகப் பேசப்பட்டு வரும் அரசியல் தீர்வுக்கும் நெருங்கிய தொடர்புடைய முக்கியமான இந்தப் பிரச்சினைகள் பற்றி பிரதமர் மோடி - மைத்திரி சந்திப்பின் போது விவாதிக்கப்படவில்லை என்பது ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே ஈழத்தமிழர் பிரச்சினையில் பா.ஜ.க. அரசின் நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்திட வேண்டும்.

பிரதமர் மோடி விரைவில் இலங்கை செல்லும் போது ஈழத் தமிழர்களின் முக்கியமான பிரச்சினைகளை இலங்கையின் புதிய ஜனாதிபதியோடு விவாதித்து முடிவுகள் காண வேண்டும் என்று செயற்குழு வலியுறுத்துகிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (இ-5)

## பாகிஸ்தான் சிறைகளில் 352 இந்தியர்கள் தடுத்து வைப்பு!

(புதுடில்லி)

பாகிஸ்தான் சிறைகளில் மீனவர்கள் உட்பட 352 இந்தியர்கள் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவிக்கையில்,



இந்தியா-பாகிஸ்தான் இடையே 2008ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தப்படி ஆண்டுதோறும் அந்தந்த நாட்டு சிறைகளில் உள்ள கைதிகள் தொடர்பான தகவல்கள் பரிமாறப்படுகிறது. அதன்படி கடந்த ஜனவரி முதலாம் திகதி 476 மீனவர்கள் உட்பட 526 இந்தியர்கள் பாகிஸ்தான் சிறையில் இருந்ததாக கூறப்பட்டது. அவர்களில் 172 மீனவர்கள் பெப்ரவரி 16ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர். இதில் விடுதலை செய்யப்பட்டவர்கள் 2 பேர் நேபாளத்தை சேர்ந்தவர்கள் என்பது பின்னர் தெரிய வந்துள்ளது. தற்போது பாகிஸ்தான் சிறைகளில் இந்தியர்கள் 352 பேர் உள்ளனர். இந்தியா சிறைகளில், பாகிஸ்தானியர்கள் 385 பேர் உள்ளனர் இவ்வாறு அவா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




பிரித்தானிய இளவரசர் வில்லியம் நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு நேற்று முன்தினம் சீனாவுக்கு சென்றிருந்தார். அங்கு மென்ங்மான் என்ற ழைக்கப்படும் கிராமத்தில் மக்களைச் சந்தித்து வணக்கம் செலுத்தும் சாட்சியைப் படத்தில் காணலாம்.

## 2ம் உலகப் போரில் மூழ்கடிக்கப்பட்ட ஜப்பான் போர்க் கப்பல் கண்டுபிடிப்பு





(டோக்கியோ)

2ஆம் உலகப்போரின் போது ஜப்பான் முசசி என்ற போர்கப்பலை பயன்படுத்தி வந்தது. அப்போது இந்த கப்பல்தான் உலகிலேயே பெரிய போர்கப்பலாக இருந்தது. பல்வேறு நாசங்களை இது செய்தது.

இந்த நிலையில் 1944ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி அந்த கப்பல் பிலிப்பைன்ஸ் நாடு அருகே சென்று கொண்டிருந்தது. அதை கண்டுபிடித்த அமெரிக்க விமான படையினர் சரமாரியாக குண்டு வீசினார்கள். இதில் கப்பல் மூழ்கியது. அதில் இருந்த ஆயிரம் வீரர்கள் உயிரிழந்தனர்.

அந்த கப்பல் எந்த இடத்தில் மூழ்கியது என்பது கண்டு பிடிக்கப்படாமலேயே இருந்தது. அமெரிக்காவில் புதைபொருள் ஆய்வு நிறுவனம் ஒன்று இந்த கப்பலை கண்டுபிடிக்க தானியங்கி வாகனங்கள் மூலம் பிலிப்பைன்ஸ் கடல் பகுதியில் ஆய்வு மேற்கொண்டது.

அதில் கப்பல் கடலுக்கு அடியில் மூழ்கி கிடப்பது கணடுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இரா.சம்பந்தன் புத்திசாலி; முஸ்லிம் காங்கிரஸ் பாராட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் புத்திசாலித்தனமான முடிவு இன ஐக்கியத்தை வலுப்படுத்துகின்றது என முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் மத்திய செயற்குழு தெரிவித்துள்ளது.

இக்குழு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பதில் இருந்த இழுபறி நிலைமைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சமயோசிதமாக அரசியல் அனுபவத்தின் புத்திசாலித்தனத்துடன் எடுத்த முடிவு கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் இன ஐக்கியத்தை வலுப்படுத்த உதவியுள்ளது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை ஆட்சியமைப்பு குறித்து மாகாணத்தில் வாழும் தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் இனமுறுகல் நிலை ஏற்பட்டு விடுமோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் சரியான தருணத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரினால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அக்குழு பாராட்டியுள்ளது.

மேலும் த.தே.கூ தலைவரினால் எடுக்கப்பட்ட முடிவு துணிச்சலும், அரசியல் புத்திசாதுர்யமும் மிக்கதுடன், இரு இனங்களுக்கிடையிலும் நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது என முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் மத்திய செயற்குழு தெரிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிப்பறை என்றதும் உங்களுக்கு சிரிப்பு வருகிறதா? உண்மையில் இது சிரிப்பதற்குரிய விடயமல்ல.- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கழிப்பறைப் பற்றாக்குறை தீர்க்கப்படவேண்டும்

மனித குலம் தனது ஆறாவது அறிவின் அடையாளமாக நாகரிகம் என்பதை தோற்றுவித்தது. ஆறாவது அறிவின் கிடைப்பனவாகிய நாகரிகத்தின் அடித்தளமாகிய ஆடை அணிதலையும் கழிப்பறைகள் அமைத்தலையும் குறிப்பிட முடியும்.

மனித இனத்தின் வரலாற்றுத் தொடக்கத்தை கண்டறிதல் என்பதை விட, பிறந்த மேனியர்களாய் நடமாடிய மனித சமூகம் எப்போது ஆடை அணிதலுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டதோ! அன்று முதல் அது நாகரிகம் என்ற எல்லையைத் தாண்டி மானம் என்ற புதுப்பரிமாணத்தைத் தொட்டுக் காட்டியது.

இப்போது மானம் என்ற உன்னதத்தை ஆடை அணிதல் பெற்றிருப்பது போல கழிப்பறை அமைத்தலும் அதன் பயன்பாடும் பெற்றிருப்பது சுகாதாரம். ஆக, மனித சமூகத்தின் அடிப்படை நாகரிகமாக இருக்கக் கூடிய கழிப்பறைகள் தொடர்பில் இன்றும் கவலை கொள்ளும் அளவில் எங்கள் நிலைமை உள்ளது.

இலங்கைத் திருநாட்டில் கழிப்பறைகளின் பற்றாக்குறையில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் முதல் நிலையில் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் இனப்பிரச்சினைகளை சுமுகமாக்க முடியும் என்று கருதப்படும் இவ்வேளையில், மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருக்கக் கூடிய கழிப்பறை வசதிகள் போதாமல் இருப்பது பெரும் துயரத்துக்குரியது.

அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால், வீடுகள் மற்றும் பாடசாலைகள் போன்ற இடங்களில் கழிப்பறைகள் சேதமுற்றுப் போயின. இவ்வாறு சேதமடைந்த கழிப்பறைகளை மீளமைக்கப்படவேண்டியமை மிகவும் அவசியமானதாகும்.

பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவரின் கருத்தியலில் கூறுவதாயின், "அபிவிருத்தியின் முதற்படியாக இருக்கக் கூடிய கழிப்பறை வசதிகள் சகல மக்களுக்கும் பாடசாலைகள் உள்ளிட்ட சகல பொது அமைப்புகளுக்கும் கட்டாயமாகக் கிடைக்கவேண்டும். அபிவிருத்தியின் அடித்தளமாக இருக்கக் கூடிய ஒரு முக்கிய விடயத்தை மறந்து பொது அபிவிருத்தி பற்றி எவரும் சிந்திக்க முடியாது." என்ற பேராசிரியரின் கருத்து ஆழ்ந்து நோக்குதற்குரியது.

மனித சமூகத்தின் முன்னேற்றகரமான பயணிப்புகள் பற்றி உலகம் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில், நாட்டின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கழிப்பறைகளின் பற்றாக்குறை என்ற மிகப் பெரும் குறைபாட்டை நிவர்த்தி செய்வது மாகாண சபை அரசுகளின் கட்டாயப்பணியாகும்.

எனவே வடக்குக் கிழக்கில் இருக்கக் கூடிய கழிப்பறைகளின் பற்றாக்குறையை முழுமையாக நிவர்த்தி செய்வது என்ற திட்டத்தை உருவாக்கி அதனை மாகாண அரசுகள் செயற்படுத்த வேண்டும்.

# தனித்துப் போட்டியிட்டு வென்று பாராளுமன்றம் வாருங்கள் பார்ப்போம்

## விமல் குழுவிற்கு அசாத் சாலி சவால்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் தமது கட்சியல்லாது, ஏனைய அரசியல் கூட்டங்களுக்கு செல்ல கூடாது எனும் தீர்மானத்தை கொண்டு வந்தமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நான் வாழ்த்துகிறேன்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, டி.யு.குணசேகர, தினேஸ் குணவர்தன, மேல்மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில உள்ளிட்டோர் தமது பதவியை தக்க வைத்து கொள்ளும் நோக்கத்திலேயே மகிந்த காங்கிரஸாக உருவெடுக்க முனைகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் இவர்களினால் எப்போதும் தனித்து நின்று தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் தனித்து நின்று எதிர்வரும் பொது தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று காட்டட்டும் என நான் சவால் விடுகின்றேன் எனவும்,

மகிந்த ராஜபக்ஷவிடம் தற்போது எஞ்சியுள்ள பணத்தை கொண்டே நுகேகொட மற்றும் கண்டி போன்ற பேரணிகளை நடாத்துவதற்கு ஆள் சேர்க்கின்றார்கள் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (செ-11)

# காலாவதியான திரிபோஷா பக்கெட் வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொயிஸ்டன் மற்றும் அயரபி ஆகிய தோட்டங்களில் காலாவதியான திரிபோஷா பக்கெட்டுகள் இம்மாதம் 1-ம் திகதி முதல் தோட்ட வைத்தியரினால் வழங்கப்பட்டு வந்துள்ளது.

நேற்று முன்தினம் இத்தோட்டங்களில் உள்ள பெற்றோர்கள் திரிபோஷா பக்கெட்டுகளை பார்க்கும் போது திகதி முடிந்தவடைந்த நிலையில் திரிபோஷா பக்கெட்டுகள் வழங்கியுள்ளதாக கண்டு பிடித்துள்ளனர்.

இதன்பின்னர் சம்பவம் தொடர்பாக பொகவந்தலாவ சுகாதார பரிசோதகருக்கு முறைபாடு செய்ததையடுத்து, சுகாதார பரிசோதக அதிகாரிகள் நேற்று நேரடியாக சம்மந்தப்பட்ட தோட்டங்களுக்கு விஜயம் செய்து பரிசோதனைகளை மேற்கொண்ட போது இதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதனை தொடர்ந்து சம்மந்தப்பட்ட வைத்திய அதிகாரியை ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாக சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு இந்த திரிபோஷாவை தயாரித்து முன்னரே உணவாக வழங்கியுள்ளதாக கவலை வெளியிட்டனர். (செ-11)

# சர்வதேச மாநாட்டு மத்திய நிலையமே காங்கேசன்துறை கட்டிட மாளிகை

## தன்னுடையது அல்ல என்கிறார் மகிந்த

(கொழும்பு)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஜனாதிபதி மாளிகை அல்ல எனவும் அது சர்வதேச மாநாட்டு மத்திய நிலையம் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எனது பாவனைக்காக காங்கேசன்துறையில் ஜனாதிபதி மாளிகையை கட்ட நடவடிக்கை எடுத்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் எந்த ஜனாதிபதி மாளிகையும் கட்டப்படவில்லை என்பதை மக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் அழிப்பதற்கு முன்னர், யாழ்ப்பாண கோட்டையில் ஜனாதிபதி மாளிகை ஒன்று இருந்தது என்பதை நினைவுப்படுத்த வேண்டும்.

அங்கிருந்த மாளிகை இதுவரை மீள்நிர்மாணிக்கப்படவில்லை. காங்கேசன்துறையில் நிர்மாணிக்கப்படுவது ஜனாதிபதி செயலகத்தின் கீழ் வரும் சர்வதேச மாநாட்டு மத்திய நிலையம். கடற்படையினரே அந்த கட்டடத்தின் நிர்மாணிப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்தனர்.

இலங்கையில், உள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம், இலங்கை மன்றக் கல்லூரி, தாமரை தடாகம் ஆகியன மாநாட்டு மத்திய நிலையங்கள் ஜனாதிபதி செயலகத்தின் பொறுப்பின் கீழ் உள்ளன.

காங்கேசன்துறை மற்றும் அருகம்பை பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடங்கள் ஜனாதிபதி மாளிகைகள் அல்ல. அவை சர்வ தேச மாநாட்டு மத்திய நிலையங்கள்.

இலங்கையில் நடைபெறும் சர்வதேச மாநாடுகளின் போது வடக்கு, கிழக்குக்கு விஜயம் மேற்கொள்ளும் வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் ஏனைய உள்நாட்டு வெளிநாட்டு அதிதிகளின் பயன்பாட்டுக்காக இவை கட்டப்படுகின்றன.

நாட்டில் சமாதானம் ஏற்பட்ட பின்னர் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு செலலும் உள்நாட்டு, வெளிநாட்டு அதிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கப்பட்டது. காங்கேசன்துறை மற்றும் அருகம்பை பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படும் சர்வதேச மாநாட்டு மத்திய நிலையங்களில் தங்குமிட வசதிகள் உள்ளன.

இதுதான் ஏனைய மாநாட்டு மத்திய நிலையங்களுக்கு இவற்றுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடாகும். இந்த மத்திய நிலையங்களை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இவ்வாறான கட்டட நிர்மாணிப்புகளை ஜனாதிபதி மாளிகை நிர்மாணிக்க மேற்கொள்ளப்படும் வீண் செலவுகள் என கடந்த காலம் முழுவதும் எனக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் ஒரு பகுதியாகவே இது அமைந்துள்ளது எனக் கூறவேண்டும். பொய் பிரசாரங்களை நம்ப வேண்டாம் என பொது மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# ஐரோப்பியத் திரைப்பட விழா

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நுண்கலைத்துறையின் ஆதரவில் ஐரோப்பியத் திரைப்படவிழா இடம்பெறவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வும் திரைப்படம் பற்றிய தமிழ்க்கருத்தரங்கும் இரு திரைப்படங்களின் காட்சியும் இன்று இடம்பெறும். மற்றைய இருநாட்களிலும் முற்பகல் 10.15, பிற்பகல் 1.15, பிற்பகல் 4.15 ஆகிய வேளைகளில் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படும். இதற்கான பிரவேசம் இலவசம். இந்நிகழ்வில் இலக்கிய கலை ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# சேவை நயப்பு

வடமராட்சி வலய அதிபர் சங்கம் நடத்தும் சேவை நயப்பு விருந்துபசாரம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி வதிரி திரு இருதயக் கல்லூரியில் வடமராட்சி வலய அதிபர் சங்கத் தலைவர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலய அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஓய்வுநிலை அதிபர்களை கௌரவிக்குமாறு அதிபர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# பௌர்ணமி விழா

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் பௌர்ணமி விழா இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஜெயச்சந்திரன் கலையரங்கில் சி.ஜி. திருமாலழகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் சுப்பையா கமலேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். மேலும் இவ்விழாவில் பருத்தித்துறை ஷாம் தனியார் வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி பி. கரிகரன் வழங்கவுள்ள **தொற்றாநோய்கள் ஓர் பார்வை** எனும் தலைப்பில் சிறப்பு விளக்கவுரையும் மானிப்பாய் சத்திய சாயி பாடசாலையின் தரம் 8 மாணவி ஷைதன்யா சிறிதரனின் விசேட ஓகன் இசையும் இடம்பெறவுள்ளது. (இ-3)

## அமைதியின் சொற்கள்

இதயம்தான் அந்தக்குரல். அந்த அழைப்பு. அது சொல்கிறது. நிறைவை ஏற்றுக்கொள், இந்தத் தாகத்தைத் தணித்துக்கொள், விழிப்புணர்வுடன் வாழ், இந்த மூச்சுக்கொண்டு வருவது முழுதையும்உன்னால் முடிந்தவரை பிழிந்தெடுத்துக் கொள், உயிராக இரு,உயிர் வாழ். *(பிரேம் ராவத்)*

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### வரவுக்கேற்ப செலவு செய்

★ பெரியோர்களுக்கு கண்ணியம் கொடுக்காதவரும், சிறியோர் மீது இரக்கம் கொள்ளாதவரும் எம்மைச் சேர்ந்தவரல்ல.

★ எவர் மரணித்துவிட்ட குழந்தையின் தாயிடம் சென்று ஆறுதல் கூறுகிறாரோ, அவருக்கு சொர்க்கத்தின் போர்வையை போர்த்தப்படும்.

★ தன்னுடைய வரவுக்குத் தக்கபடி செலவு செய்பவனும், எல்லாச் செயல்களிலும் நடுநிலையை கைகொள்பவனும் நிச்சயம் ஏழ்மையை அடையமாட்டான்.

★ ஆடம்பர வாழ்வை விட்டு, உங்களைத் தற்காத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் ஆடம்பர வாழ்வு வாழக் கூடியவர் அல்லாஹ்வின் சொந்த அடியாராகமாட்டார்.

★ செல்வம் என்பது பொருட்கள் அதிகமாக வைத்திருப்பதல்ல. போதும் என்ற மனம் படைத்திருப்பதே செல்வம்.

★ செல்வச் செழிப்போடு வாழும் போது, நீ இறைவனை நினைத்தால், துன்பம் அடையும்போது இறைவன் உன்னை நினைப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோட் ஜெடி சதம்

# இமாலய இலக்கை எட்டிய வங்கதேசம் அசத்தல் வெற்றி




ஸ்கொட்லாந்துக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில், கடின இலக்கை விரட்டிய வங்கதேச அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

நியூசிலாந்தின் நெல்சன் நகரில், வங்கதேசம், ஸ்கொட்லாந்து அணிகள் மோதிய உலகக்கிண்ணத்திற்கான 'ஏ' பிரிவு லீக் போட்டி நேற்று நடந்தது. இதில் நாணய சுழற்சியில் வென்ற வங்கதேச அணித்தலை வர் மொர்டசா, முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணிக்கு மெக்லியாடு (11), ஹமிஸ் கார்டினர் (19) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தனர்.

பின்னர் வந்த மாட் மக்கான் (35), அணித்தலைவர் மம்சன் (39), பெர்ரிங்டன் (26), கிராஸ் (20) பெரிய அளவில் சோபிக்கவில்லை. இருப்பினும் ஓரளவு ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தனர்.

அபாரமாக ஆடிய தொடக்க வீரர் கைல் கோட்ஜெர், ஒருநாள் அரங்கில் தனது 2 ஆவது சதத்தை பதிவு செய்தார். இவர், 134 பந்தில் 156 ஓட்டங்கள் குவித்து (4 சிக்சர், 17 பவுண்டரி) வெளியேறினார்.

ஸ்கொட்லாந்து அணி 50 ஓவரில முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 318 ஓட்டங்கள் குவித்தது. வங்கதேசம் சார்பில் டஸ்கின் அகமது 3 விக்கெட்டுகளையும், நாசிர் ஹொசைன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதைத் 'தொடர்ந்து 319 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை விரட்டிய வங்கதேச அணிக்கு சவுமியா சர்க்கார் (2) ஏமாற்றினார்.

பொறுப்பாக ஆடிய தமிம் இக்பால் (95), மகமதுல்லா (62) அரைசதம் கடந்து கைகொடுத்தனர். சிறப்பாக விளையாடி வந்த முஷ் பிகுர் ரஹிம் (60) தன் பங்கிற்கு அரை சதம் கடந்து ஆட்டமிழந்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்த சாகிப் அல் ஹசன் (52), சபீர் ரஹீம் (42) சிறப் பாக விளையாடி அணியை வெற் றியை நோக்கி அழை த்து சென்றனர். இவ ர்கள் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஐ.சி.சி
உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

நாளைய போட்டிகள்

பாகிஸ்தான் — காலை 6.30 — தென்னாபிரிக்கா

சிம்பாவே — காலை 9.00 — அயர்லாந்து


இன்றைய போட்டி

மே.தீவுகள் — மதியம் 12.00 — இந்தியா

வங்கதேசத்தின் பொறுமையான ஆட்டத்தால் அந்த அணி 48.1 ஓவர்க ளிலே இலக்கை எட்டி 322 ஓட்டங்கள் குவித்து வெற்றி பெற்றது.

ஸ்கொட்லாந்து சார்பில் ஜோஷ் டாவே 2 விக்கெட்டுகளையும், வர்ட்லா, அலாஸ்டர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார். 156 ஓடடங்கள் குவித்த கோட்ஜெர் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)




### ஸ்கொட்லாந்து - துடுப்பாட்டம் 318 (50 ஓவர்கள்)

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| கைல் கேயட்சர் | 156 | 134 |
| பிரெஸ்டன் மாம்சன் | 39 | 38 |
| மாச்சன் | 35 | 50 |
| ரிச்சி பெரிங்டன் | 26 | 16 |




### பங்களாதேஷ் - துடுப்பாட்டம் 322/4 (48.1 ஓவர்கள்)

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| தமி இக்பால் | 95 | 100 |
| முகமதுல்லா | 62 | 62 |
| முஷ்பிகுர் ரகிம் | 60 | 42 |
| ஷாகிப் அல் ஹசன் | 52 | 41 |



### பங்களாதேஷ் - பந்து வீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| தஸ்கின் அகமது | 07 | 0 | 43 | 3 |
| நசீர் உசேன் | 05 | 0 | 32 | 2 |
| மோர்டசா | 08 | 0 | 60 | 1 |
| ஷாகிப் அல் ஹசன் | 10 | 0 | 46 | 1 |



### ஸ்கொட்லாந்து - பந்து வீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| ஜோச் டேவி | 10 | 0 | 68 | 2 |
| இயான் வாட்லா | 9.1 | 0 | 75 | 1 |
| அலஸ்டேர் எவன்ஸ் | 10 | 1 | 67 | 1 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்ற...

கட்டடத்தில் அமைக்கப்பட்ட பல் சிகிச்சை நிலையம் ஆகியவற்றைத் நேற்று வியாழக்கிழமை திறந்து வைத்தும 24 கடடில்களைக்கொண்ட விடுதிக்கான அடிக்கல்லை நாட்டிய பின்னர் உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில், வடமாகாண ஆளுநர் எச்.என்.ஜி.எஸ்.பளிஹக்காரவும் நாங்களும் ஒற்றுமையுடன் செயற்படுவதால் இந்த வட மாகாணத்துக்கு பல நன்மைகள் வந்தடையும் என்பதில் எனக்கு சந்தேகம எதுவுமில்லை.

ஆளுநருடன் சேர்ந்து மருத்துவ தொகுதியொன்றைத் திறந்து வைக்கும் முதல் நிகழ்வு இது. எவ்வாறு பாதிக்கப்பட்ட எமது மனங்களுக்கு புதிய ஆளுநர் மன நிம்மதியையும் மகிழ்வையும் கொண்டு வந்தாரோ அதேபோல் போரால் பாதிக்கப்பட்டிருந்த புதுக்குடியிருப்பு பிரதேச வைத்திய சாலையும் நேற்று நடைபெற்றுள்ள நற்காரியங்களின் நிமித்தம் புதுப் பொலிவுடன் விளங்குகின்றது. இந்த வைத்தியசாலையானது முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அடுத்த மிகமுக்கிய வைத்தியசாலையாக இந்தப் பிராந்தியத்தில் விளங்குகின்றது.

சுமார் 42,000 பொதுமக்களின தேவைகளைப் பூர்த்தி செய்யும் [illegible]நத்துவமனையாகப் புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை விளங்குகின்றது. மூன்று நிரந்தர வைத்தியர்களையும், தாதிய அலுவலர்களையும் மேலும் 35 பணியாளர்களையும் உள்ளடக்கி சேவை செய்து வருகின்றது இந்த வைத்தியசாலை. ஆளுநர், நாங்களும் போரால் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டிருந்த இந்தப் பிரதேசங்கள், நொந்து, நொய்ந்து நோவுற்றிருந்த இந்தப் பிரதேசங்கள் புதுப்பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற பேரவாவுடன் இருக்கின்றோம். வட மாகாண ஆளுநர் நிர்வாகச் செயற்பாடுகளில் பக்கபலமாகவுள்ளார் எமக்கு ஆளுநர் ஒத்தாசையாக விளங்குகின்றார்.

அவருக்கு நாம் எம்மாலான சகல அனுசரணைகளையும் வழங்கி வருகின்றோம். மாகாண நிர்வாகத்தில் தேவையில்லாத குறுக்கீடுகளை தவிர்த்து வரும் எமது ஆளுநருக்கு நாம் எமது நன்றிகளைக கூறக் கடமைப் பட்டுள்ளோம். போட்டி வேண்டும் பொறாமை கூடாது. போட்டி மனப் பான்மை எம்மை மேலும் மேலும் தொழிற் திறன் மிக்கதாய் அல்லது வினைத் திறன் மிக்கதாய் அல்லது சேவைத் திறன் மிக்கதாய் விளங்க உதவி புரிகின்றது.

பொறாமையானது எம்மை அழிவு வழிக்கு அழைத்துச் செல்கின்றது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் போட்டி மனப்பான்மையால் தம்மை விருத்தி செய் திருந்தார்கள் எனில் கௌரவர் தமது பொறாமை மனப்பான்மை யால் ஈற்றில் அழிவையே தேடிக் கொண்டனர். நாடாளுமன்ற தேர்தல்கள் இன்று எட்டி பார்த்துக் கொள்ள விழையும் இந்த நேரத்தில் எங்களுக்குள் போட்டிகள் வளரட்டும்.

ஆனால் பொறாமை எழாது இருக்கட்டும். மற்றவர் களை ஊக்குவித்து அதேநேரத்தில் நாமும் ஊக்கமுடன் முன்னேறுவதே போட்டி மனப்பான்னையின் தாற்பரியம. நான் மட்டும் முன்னேற வேண்டும் மற்றையவன் வீழ வேண்டும் என்பது பொறாமை மனோநிலையின் வெளிப்பாடு எனக் கூறினார். (எ-11)

## அரசிய...

அத்துடன், நாடாளுமன்றத் தேரதலில் போட்டியிடுவதற்கு இடமளிக்குமாறு பசில் ராஜபக்ஷ கோரிக்கை விடுக்கமாட்டார் என்றும் அவர் குறிபபிட்டுள்ளார்.

தான அரசியலில் இருந்து ஒதுங்கி விட்டதாகவும், இலங்கைக்கு திரும்பி வரும் திட்டமில்லை என்று தன்னிடம் பசில்ராஜபக்ஷ கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான பசில் ராஜபக்ஷ, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல பரப்புரைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்.

அமெரிக்க வதிவிடஉரிமை பெற்ற பசில் ராஜபக்ஷ, ஜனவரி 8ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர், அமெரிக்காவுக்கு சென்றுவிட்டார்.

அவர் கொழும்பில் இருந்து புறபபட்ட போது, பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நாடு திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டை கொள்வனவு செய்திருந்த போதிலும், அவர் இதுவரை கொழும்பு திரும்பவில்லை. (செ-11)

## கண்டி...

திற்கும் மேற்பட்ட மக்கள் வந்ததால், தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையில் உருவாகும் புதிய முன்னணியின் ஊடாக மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக போட்டியிட இணக்கம் வெளியிட்டுள்ளதாக கட்சியின் உயர்மட்ட அதிகாரிகள் தனக்கு கூறியதாகவும் தேசிய சுதந்திர முன்னணியின் கண்டி மாவட்ட பிரதிநிதியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த கலந்து கொள்ளாத நிலையில், தனக்காக லட்சக்கணக கான மக்கள் கூடியதால், அந்த மக்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் மகிந்த பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என அவரது குடும்பத்தினர் தீர்மானித்துள்ளனர்.

கண்டியில் இன்று நடைபெறும் கூட்டத்திற்கு 8 லட்சம் மக்கள் வருவார்கள் என தேசிய சுதந்திர முன்னணி நம்புகிறது.

அத்துடன் ஸ்ரீ சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தையும் மீறி அந்த கட்சியை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் பலர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் எனவும் அந்த பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## இலங்கை...

ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 28ஆவது அமர்வில் நேற்று அவர் உரையாற்றும் போதே அவர் மேற்படி கருத்தை தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

இலங்கை அதிகாரிகள் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆழ்ந்த நிலையில் சிந்திக்க வேண்டும். அவர்களின் வாழ்வு நிலை உதவிகள் சரிவர ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பிலான அறிக்கை சமர்ப்பிக்கப்படவிருந்தபோதும் கோரிக்கைகளின் அடிப்படையில் அது செப்டெம்பர் மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த முடிவு, விசாரணைக் குழுவினரின் ஆலோசனைகளுக்கு ஏற்பவே மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கருத்திற் கொண்டே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் செப்டெம்பர் மாதம் இலங்கை தொடர்பான அறிக்கை வெளிவிடப்படும். இதில் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் தகவல்களும் சேர்த்துக் கொள்ளப்படும்.

இலங்கையின் அரசாங்கம், என்னையும் உண்மையை கண்டறிதல் மற்றும் நீதிக்கான விசேட நிபுணரையும் நாட்டுக்கு அழைத்துள்ளது. எதிர்வரும் செப்டெம்பருக்குள் எமது அதிகாரிகள் உண்மையை கண்டறிய முயற்சிப்பர் என்றும் செய்ட் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரசாங்கமும் இந்த வாய்ப்பை சரிவர பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் செய்ட் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## மின்கம்ப...

அதிகாலை அச்சுவேலி சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பங்குபற்றியவர்கள் அடுத்தநாள் வியாழக் கிழமை அதிகாலை 1.30 மணியளவில் கடையொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாது சென்றுள்ளனர்.

பயணத்தின் போது குறித்த இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் அச்சுவேலி புத்தூர் பகுதியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை செல்வகுமார் (வயது-31) என்பவரே சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.

மற்றும் அவருடன் பயணித்த அதேயிடத்தினைச் சேர்ந்த யோகநாதன் வினோதரன் (வயது-26) என்பவர் படுகாயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (செ-11)

## மாலதி...



எரிந்து கட்டடத்தின் கூரையும் சேதம் அடைந்துள்ளது. நேற்று நண்பகல் 11 மணியளவில் கட்டடத்தில் இருந்து புகை வருவதை அவதானித்த வழிப்போக்கர்கள் மற்றும் கல்லூரியில் நின்ற ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் இணைந்து தீயை அணைத்துள்ளார்கள்.

இந்த கலையரங்கம் எரியூட்டப்பட்டதால் சுமார் ஐந்து லட்சம் ரூபா வரையில் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. சம்பவம் தொடர்பாக கல்லூரி நிர்வாகத்தினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப பாடு செய்யபபட்டுள்ளது. (செ-11)

## தேர்தல்...

நடத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையில் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒருவர் தெரிவாகும்படியாக, விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையையும் கலந்த தெரிவு முறையின் கீழ் இந்தக் காலப் பகுதியிலேயே வரும் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்றார் ராஜித சேனாரத்ன.

புதிய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ், ஏப்ரல் 23-ம் திகதி தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

அவ்வாறே, மார்ச் 17-ம் திகதி புதிய தேர்தல்முறைக்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் 100 நாள் வேலைத்திட்டம் கூறுகின்றது.

இந்த பின்னணியில், தேர்தல் முறை மாற்றத்தில் ஏற்படக்கூடிய தாமதத்தைக் கருத்தில் கொண்டு, பழைய முறையின் கீழேயே தேர்தலை நடத்திவிட்டு, புதிய அரசாங்கத்தின் கீழ் தேர்தல் முறையை மாற்றலாம் என்கின்ற யோசனையையும் சில தரப்பினர் முன்வைத்து வருகின்றனர்.

எனினும், புதிய தேர்தல் முறையை விரைவில் அறிமுகப் படுத்திவிட முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர், ஜனாதிபதியிடம் நம்பிக்கை தெரிவித்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகின்றார்.

ஆகாயத்திலிருந்து மேற்கொள்ளப்படும் நில அளவீட்டு முறை இங்கு இருக்கின்றது. மக்கள சனத் தொகை விகிதாசாரம், நிலப் பரப்பு போன்றவற்றை கணனி மூலம் விரைவில் கணித்துவிட முடியும் என்றார் அமைச்சரவை பேச்சாளர்.

புதிய தெரிவுமுறையின் கீழ் நடத்துவதாக இருந்தால் தேர்தலை சிறிது காலம் தள்ளிவைப்பது ஒன்றும் பிரச்சினையாக இருக்காது என்றும் ராஜித சேனாரத்ன கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு இப்படியாக இருந்தாலும், ஏற்கெனவே உடன்பட்ட காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று புதிய அரசாங்கத்தின் முக்கிய பங்காளியான ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது.

100 நாட்களுக்குள் செய்ய வேண்டியவற்றை செய்துமுடிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நிறைவேற்று ஜனாதிபதிமுறை மாறவேண்டும், தேர்தல் முறை மாறவேண்டும். அவ்வாறே தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டும் என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹஷீம்.

புதிய தேர்தல் முறையைக் காரணம் காட்டி தேர்தலை நடத்தாமல் இருக்கமுடியாது என்றும் அமைச்சர் கபீர் ஹஷீம் தெரிவித்தார். (செ-11)


## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

தோற்றம் 13 - 04 - 1929



மறைவு 07 . 02 . 2015

அமரர் **அன்னக்கண்டு ஐயாத்துரை**

08.03.2015

கடந்த 07.02.2015 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் அன்னக்கண்டு ஐயாத்துரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேலுப்பிள்ளை கடையடி, மாதகல்.

நன்றி

(C-296)

இங்ஙனம் குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விசேட
# சிங்கள வகுப்பு

இடம்: இணுவில் பொது நூலகம்
காலம்: 07.03.2015 சனிக்கிழமை
நேரம்: மாலை 6.30 மணி

ஆரம்பம்: 07 03 2015

யாழின் பிரபல ஆசிரியர்
ஸ்ரீ மாஸ்டர்

இரண்டாம் மொழி சிங்களம் கற்க ஆர்வமுள்ளவர்கள் கற்றுப் பயன்பெறவும்
அரச கரும மொழித்தேர்ச்சி பரீட்சைக்கு தோற்றும் அரச ஊழியர்களுக்கு ஏற்ற வகையில் கற்பிக்கப்படும்

(C-294)

உடன் பதிவுகளை நூலகத்தில் மேற்கொள்ளவும்


# ரணிலின் பிரதமர் பதவி...

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சு பதவிகளை பெற மக்கள் ஆணை வழங்கவில்லை.

தேர்தல் நேரத்தில் வழங்கிய வாக்குறுதியின்படி கூடியளவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 100 நாட்கள் மாத்திரமே பிரதமராக பதவி வகிக்க முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் 41 உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர். குறைந்த உறுப்பினர்களை வைத்து கொண்டு ரணில் விக்ரமசிங்க பிரதமராக முடியாது. ரணில் - மைத்திரி இணக்கமே இந்த இடத்தில் உள்ளது.

100 நாட்களின் பின்னர் நாடாளுமன்றத்தை கலைக்கவில்லை என்றால் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.

2010 ஆம் ஆண்டில் மக்கள் வழங்கிய ஆணையின்படி இந்த நாடாளுமன்றம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை செயற்பட முடியுமா? 2010 ஆம் ஆண்டு வழங்கிய ஆணை தற்போது செல்லுபடியாகாது.

தற்போதைய நாடாளுமன்றம் நேர்மையானது அல்ல. 2010 ஆம் ஆண்டில் எதிர்க் கட்சியில் போட்டியிட்டு அரசாங்கத்திற்கு சென்ற ஹக்கீம் போன்றவர்கள் இந்த நாடாளுமன்றத்தில் உள்ளனர். 2010 ஆம் ஆண்டு ரணிலுக்கு பிரத மராகும் மக்கள் ஆணை கிடைக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு மக்கள் வழங்கிய ஆணை திரிபுபட்டுள்ளது. இதனால், புதிய நாடாளு மன்றத்தை தெரிவு செய்ய மக்களுக்கு சந் தர்ப்பத்தை கொடுக்க வேண்டும்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 2010 ஆம ஆண்டு சாராய முதலாளி அல்ல. ஆனால் தற்போது சாராய முதலாளி. ஜகத் புஷ்பகுமாரவை மாட்டுத் திருடன் என்று அப்போது கூறவில்லை, ஆனால் தற்பொழுது கூறுகின்றனர்.

2010 இல் ஹெரோயினை கொண்டு வராத நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது அதனை நாட்டுக்குள் கொண்டு வருகின்றனர்.

அன்று மேர்வின் சில்வா அரச ஊழியர்களை மரத்தில் கட்டவில்லை. இன்று அரச ஊழியரை மேர்வின் மரத்தில் கட்டி வைத்தவர்.

ரோஹித்த அபேகுணவர்தன அப்போது இலஞ்சம் ஊழல் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்படவில்லை.

தற்போது ஆணைக்குழுவிற்கு அழைத்ததால், அவர் பாம்பு தீண்டியவர் போலாகியுள்ளார். இதனால், புதிய நாடாளுமன்றத்தை தெரிவு செய்ய மக்களுக்கு உரிமை உள்ளது எனவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் யேசுரத்தினம்



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் யேசுரத்தினம் நேற்று (05.03.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், அமரர் யேசுரத்தினத்தின் மனைவியும், அமரர் மனோன்மணி மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரதி, மாலதி ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராஜா (ஓய்வு பெற்ற மரக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்), நாகராஜா (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்) ஆகியோரின் மாமியாரும், சிவதர்சனன், பார்த்திபன், பிரபாகரன் - சகிலா, துஷ்யந்தன் - ரோகினி, சுதர்சன், விஜிந்தன் - ரோகினி, கிரிஸ்நாத் - மீரா, சுகீந்திரராசா - வினோதினி, வரதன் - வைஷ்ணவி, அரவிந்தன் - துஷ்யந்தினி, மோகனராஜா - நிஷாந்தினி, தஜீவன் ஆகியோரின் பேர்த்தியும், ரமேஷ், சுரேஷ் ஆகியோரின் பெரியதாயும், மீரா, ரமணன், தயாளன் ஆகியோரின் சிறியதாயும், கஜேந்திரனின் சின்னமாமியும், விதுஷா, பிரவீன், அபிஷா, சரண்யா, நிலக்ஷன், கர்சன், சந்தோஷ், டனீஷ் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் காங்கேசன்துறை வீதி, உடுவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(9686) தகவல்: குடும்பத்தினர்


"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ"



ஸ்ரீஸ்ரீ கல்கி பகவான் ஜென்ம தின நிகழ்வு
பாற்குடபவனி / நேரடி WEB CAST தரிசனம் / பாதுகா அபிஷேகம்
07.03.2015 சனிக்கிழமை - காலை 8.30 மணி
இடம்: நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம்
அன்னதானம் நடைபெறும்
பாற்குட பவனியானது காலை 7.00 மணிக்கு
இல.5 பிறவுண் வீதி,2ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமாகும்
ஸ்ரீ அம்மா பகவான் சுவர்ணயுக ஆலயம், இல.05, பிறவுண் வீதி, இரண்டாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
தொடர்பு: 0777737926 (எடிசன் அக்கடமி - யாழ்ப்பாணம்) (C-9681)

NORTH LEAD
Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing.
சகலவித கணனி, மடிக்கணனிகளின் உதிரிபாகங்கள் விசேட விலையில்
ALL LAPTOPS, DESKTOP COMPUTERS & ACCESSORIES FOR SALES



DELL hp acer TOSHIBA COMPAQ SAMSUNG lenovo SONY ASUS IBM

| | | |
|---|---|---|
| Lap Keyboard From : 3850 | Laptop DVD Writer : 3650 | G-31 Motherboard : 6700 |
| Laptop Org Batteries : 5850 | 500GB Lap Hard Disk : 6950 | G-41 Motherboard : 8250 |
| Lap Chargers Multy: 1450 | 1TB Lap Hard Disk : 9850 | H-61 Motherboard : 6550 |
| Laptop Chargers Org : 2350 | Laptop Front Covers : 5400 | H-81 Motherboard : 7450 |
| Lap LCD-LED Display : 7950 | Laptop Back Covers : 6700 | 500GB Hard Disk : 6650 |
| Lap Motherboard From: 18350 | Laptop Touch Pad From : 5750 | DVD Writer From: 2750 |

Condition Apply

சகலவித கணனிகள் மற்றும் மடிக்கணனிகள் உடனுக்குடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்
(C-289) North Lead Computers
No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275
Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது. (C-281)
* Excellent Teachers' Panel & Individual Attention
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550 0777585913, 0777222422, 071429935
அறிமுக (Introduction) வகுப்புகளுக்கு வருகை தருபவர்களுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது
Batch 1 : 02-03-2015
Batch 2 : 05-03-2015
Batch 3 : 07-03-2015
Batch 4 : 09-03-2015
அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 07/03/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.

Paper Class
A/L 2015 தமிழ்
முழுத் தேர்ச்சிகளும் பூரணப் படுத்தப்படும்
கடந்தகால வினாக்கள் மாதிரி வினாக்களின் மீட்டல் வகுப்பு
தமிழ்: M. ஜீவானந்தன் B.A (Hons)
ஆரம்பம்: 07.03.2015 சனி 12 மணி (C-240)
BEACON வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்.
A/L 2016, 2017 வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுகின்றது.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வேலையாட்கள் தேவை
Carpenters (தச்சுவேலை)
குறைந்தது 8 தொடக்கம் 10 வருட அனுபவம் உடையவர்களாக இருக்க வேண்டும்
Spray Painters (ஸ்பிறே பெயின்ரர்)
குறைந்தது 7-8 வருட அனுபவம் உடையவர்களாக இருக்க வேண்டும் (C-292)
சம்பளம் அனுபவத்திற்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு: 0771119535


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org